712
19 MAY 1958
MADRAS

தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6

மலர் 4 | சென்னை 17-5-58 | சனிக்கிழமை | இதழ் 44

198383
சென்னை-600 008

கடவுளை அணுகினேன்

எல்லோரும், 'கடவுளிடம் சென்று நிலையை அறிந்து வாருங்கள்' என்ருர்கள்.

'சரி' என்று சொல்லிவிட்டேன். ஆனல் எனக்குள் ஒரு அச்சம் இருந்தது. கடவுள் யார்? அவர் எவ்வளவு உயர்ந்தவர்? மாலும் நான்முகனும் காணமுடியாத கடவுள்—எல்லாப் பொருள்களையும் கடந்து நிற்கும் ஒரு செம்பொருள்—ஆக்கல், அழித்தல், காத்தல் செய்யும் கடவுள். அவரின் நிலையை எளியவன் எப்படி அறிந்துவருவது, என்று கலங்கி நின்றேன்.

மறுநாள், 'என்ன கடவுளிடம் சென்றீர்களா?' என்ருர்கள்.

'செல்லுகின்றேன்' என்று பதில் சொன்னேன்.

மறுநாள் — மறுநாள் — மறுநாள். இதே கேள்வி! இதே பதில்!

ஒருநாள் என் ஐயத்தை ஒருவரிடம் கூறினேன். 'கடவுளை-அவரின் மேலான நிலையை—அறியவோ, அளவிடவோ நான் தகுதியுடையவஞ?' என்றேன்.

'கடவுளின் நிலையை அறிய நீ சிறிதும் தகுதியற்றவன்! அருகதையற்றவன்!

ஆனல் கடவுளிடம் சென்று அவர் மக்களைப்பற்றி கொள்ளும் நிலையை அறிந்து வாருங்கள்' என்ருர் அவர்.

'சரி' என்று, அன்று புறப்பட்டேன்.

'ஐயா' என்றது ஒரு முடம்!

'சாமி, ஒரு குழந்தை இருந்தால் போதும்' என்றது ஒரு குருடு!

'பகவானே, ஊன்றிக் கொள்வதற்கு ஒரு கோலு இருந்தால் போதும்' என்றது ஒரு கூன்!

'சரி' என்று அவர்கள் கேட்டதை எல்லாம் கொடுத்துவிட்டு அப்பால் சென்றேன்.

வாந்தி எடுத்துக்கொண்டு அல்லல் பட்டுக்கொண்டிருந்தான் ஒருவன். களைத்துக் கிடந்த அவனை அண்மினேன்.

'என்ன உதவி வேண்டும்?' என்றேன்.

'ஹே! ஹே! ஹே!'—அவன் பதில் அதுதான்! அதற்குமேல் அவனல் பேச முடியவில்லை. அவன் ஒரு ஊமை-வாய் பேசாதவன் என்று அறிந்து கொண்டேன்.

தண்ணீர் கொண்டு வந்து குளிப்பாட்டினேன்; முகத்திற்கும் தெளித்தேன். கையோடு பிடித்து அவனை அழைத்து வந்து என் வீட்டில் படுக்க வைத்தேன்.

மீண்டும் என் தலைப்பாகையைச் சரிப்படுத்திக் கொண்டேன்! ஊன்று கோலை எடுத்து ஆயத்தமாக வைத்துக் கொண்டேன். கடவுளிடம் போகப் புறப்பட்டேன்.

'சாமி, ஏழுநாள் பட்டினி'

'ஐயா, அகதிகள் நாங்கள்.'

'தொரை, குழந்தையைக் காப்பாற்ற ஏதாவது..'

—இப்படி எத்தனையோ குரல்கள் என்னைக் கடவுளிடம் போகவிடாமல் தடுத்தன.

அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் செய்தேன். எனக்குக் களைப்பு வந்துவிட்டது. என் களைப்பை நீக்கிக் கொள்ள, மீண்டும் வீட்டுக்குள் நுழைந்தேன். அங்கு ஒன்றுமில்லை. நல்ல வேலை ஒரு குவளையில் கொஞ்சம் நீர் இருந்தது.

'மொடக், மொடக்'—இரண்டு மிணறு குடித்தேன்.

மூலையில் சாய்த்து வைத்திருந்த கோலை எடுத்துக்கொண்டு கிளம்பினேன் கடவுளிடம்.

'ஹே, எங்கே போறே நில்!' என்ருன் அவன். அட என்னப்பா நான் நல்லதைக் கேட்க புண்ணிய மூர்த்தி கடவுளிடம் போகிறேன். இதற்கு இவ்வளவு தடையா?' என்று திரும்பினேன்.

'நில்! நீ புண்ணியமூர்த்தியிடம் செல்ல தகுதியற்றவன்! அவரே உன்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கும் தகுதி உனக்குண்டு!' என்ருன் அவன்.

'ஆ, அப்படியா!' என்று அவர் காலில் விழுந்தேன்.

'தொண்டு செய்ய முடியும் வரை வாழ்!' என்று அவர் என்னை வாழ்த்தினர்.

'தேவா, எங்களைப் பற்றி உங்கள் நிலையென்ன?' என்றேன்.

'ஹி-ஹி-ஹி' என்று சிரித்தார் அவர்!

ஒன்றும் புரியாமல் திகைத்தேன் நான்!

'கேளப்பா கேள்! என் நிலையைச் சொல்லுகின்றேன். அல்லும் பகலும் அரகரா என்று ஒலிக்கின்ற உத்தமர்களிடம் ஜபமாலையை உருட்டுகின்ற உபதேசிகளிடம்-ஆராதனையும் அர்ச்சனையும் பண்ணும் ஆட்களிடம்—உயிர்ப்பலியும், தயிர்ப்பச்சடியும் எனக்குக் காணிக்கையாக அளிக்கிறவர்களிடம்-விரதங்களும் அனுஷ்டானங்களும் நிரம்பி இருக்கின்றவர்களிடம்-யாத்திரையும் கோத்திரமும் மேற்கொண்டவர்களிடம் — குடுமியும் மொட்டையும் கொண்டுள்ளவர்களிடம்-பட்டையும், தீட்சையும், காஷாயமும் பெற்றவர்களிடம் — காடும் மேடும் சென்று கடுந்தவம் புரிபவர்களிடம்—அருவியும் சுனையும் ஆடி அல்லல்படும் அவர்களிடம்—குகையிலும் குன்றிலும் சென்று குவிபவர்களிடம் — புற்றிலும் புதரிலும் வாழ்ந்து வெற்றவம் புரிபவர்களிடம் எனக்கு வேலையே கிடையாது!

'அங்கு நான் தனிக் கண்ணோட்டம் செலுத்துவதே கிடையாது!

'தவசிகளைக் கண்டால் மாக்களாகப் படைக்கவேண்டியவர்களை மக்களாகப் படைத்து விட்ட ஒரே காரணத்தால், அன்பும் அழகும் அருளுமிக்க இல்லறத்தை-நகரத்தை-நாட்டுப்புறத்தை வெறுத்து விட்டு, புதரிலும் காட்டிலும் கரட்டிலும் வாழ்கின்ருர்களே என்று எண்ணிக் கொள்வேன்!

தீர்த்தங்களில் மூழ்கிக் காட்டுபவர்களையும் அர்ச்சகர்களையும், சபமாலை உருட்டுபவர்களையும், பலி செய்பவர்களையும் கண்டால் சோம்பல் ஏறி, என்னல் காரியத்தை சாதித்துக் கொள்ள எனக்கு விருந்தும் புகழ் மாலையும் கையூட்டும் கொடுத்து மயக்குகிறவர்கள் என்பது எனக்கு மறந்து போகாது!

'அதுமட்டுமல்ல ஏழைகளை எளியவர்களை பாமரர்களை உறிஞ்சுபவர்கள் என்ற எண்ணம் என்னை விட்டு நீங்குவதில்லை!

'நான் எப்பொழுதும், ஏழைகளுக்கு உதவுபவர்களிடம்-நோயாளிகளுக்கு அனுதாபம் காட்டும் அன்புள்ளவர்களிடம்- அங்கஹீனர்களின் குறைகளைப் போக்கும் அருளாளர்களிடம்-பிச்சைக்காரர்பால் இச்சையாக நடந்துகொள்ளும் இல்லறவாசிகளிடம்-எல்லாப் பொருள்களிடத்தும் அன்பு செலுத்துபவர்களிடம்-உயிர்களை இம்சிக்காது அவற்றை நம்பிக் காப்பவர்களிடம்-தம்மைப் போன்ற மனிதரிடமே வித்தியாசம் பல கற்பித்து இழிவுபடுத்தாத அச்சான்ருேரிடம் எனக்கு நிரம்ப வேலையுண்டு!

அவர்கள் ஆணைக்காக நான் காத்துக் கிடப்பதும் உண்டு!

— 9-ம் பக்கம் —

தென்றல்

கனடாவின் அரசியல்

அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு வடக்கே 3700,000 சதுர மைல் பரப்பையும், 12,250,000 மக்கட் தொகையையும் கொண்டு இலங்குவதுதான் கனடா நாடு. பரப்பில், இது அமெரிக்க ஐக்கிய நாடுகளை விடப் பெரிதுதான் என்றாலும், நெடிய, குளிர் மிகுந்த பூமிகள் ஆங்காங்கே வியாபித்து இருப்பதால், இந்நாட்டின் பெரும்பகுதி குடியேற்றத்திற்கு ஏற்றதாக இல்லை. அதனால் கனடா வாழ் மக்களில் பெரும்பான்மையினர், அமெரிக்காவின் எல்லைப் புறங்களுக்கு அருகே அமைந்துள்ள பிராந்தியங்களிலேயே வசித்து வருகிறார்கள்.

கனடா நாட்டுக் குடிமக்களில் பெரும்பான்மையினர் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களுமாவர். மொத்த மக்கட் தொகையில், பிரெஞ்சுக்காரர்கள் மூன்றில் ஒரு பங்கு இருக்கிறார்கள். கியுபெக் மாகாணத்தில் செறிந்து காணப்படும், பிரெஞ்சு - கனடா மக்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க கலாச்சார சிறுபான்மை இனத்தவராக விளங்குகிறார்கள்.

இன்றைய பிரான்ஸ் நாட்டு அரசியல் மாறுதல்களில் இருந்து நெடுநாட்களுக்கு முன்பே தமது தொடர்பை அறுத்துக்கொண்ட கனடா நாட்டுப் பிரெஞ்சுக்காரர்கள், கனடாவில், தவிர்க்க முடியாத ஒரு சில அம்சங்களைத் தவிர, ஆங்கில ஆட்சிமுறை புகுத்தப்படுவதை எதிர்த்தார்கள். தீவிர ரோமன் கத்தோலிக்கர்களான இவர்கள், கனடாவின் கூட்டாட்சிக்குள்ளேயே தங்களுக்கென ஒரு தனி சுயாட்சியைக் கோரிப் பெற்றார்கள்.

கனடா நாட்டின் விவசாயம் விரிந்து பரந்ததொன்றாகும். அஃதாவது, கோதுமை, ஓட், பார்லி இவைகளைப் பயிரிடுவது, கால்நடைகளைப் பராமரித்தல், மீன் பிடித்தல், கம்பளங்கள் நெய்தல் போன்ற தொழில்கள் விவசாயத் துறையினுள் அடங்கியவைகளாகும். இருபதாம் நூற்றாண்டில்தான், கனடாவில், தொழில் துறை, வளர்ச்சியடைய ஆரம்பித்தது. கணிசமான அமெரிக்க மூலதனம் கனடா நாட்டில் போடப்பட்டிருக்கிறது. அமெரிக்க மூலதனம் இந்நாட்டில் தாராளமாகப் போடப்படுவதற்குத் தலையாய காரணம் என்னவென்றால், கனடா சர்க்கார், அந்நாட்டுக்குள்ளேயே செய்யப்படும் தொழில்களுக்குச் சுங்கவரி விதிப்பினின்றும் விலக்கு அளித்துள்ளதுதான் எனில், அது மிகையாகாது. இந்த வரி விதிப்பு விலக்குக் கொள்கையின்படி, கனடாவில், அமெரிக்கர்களின் மூலதனத்தைத் துணைக்கொண்டு நடத்தப்படும் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் மோட்டார் வண்டிகளின்மீது சுங்க வரி விதிக்கப்படுவதில்லை. அன்றியும் அங்கு உற்பத்தி செய்யப்படும் மோட்டார் வண்டிகள் வேற்றுநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நேரத்திலும், ஏற்றுமதி வரி விதிப்பில் பிறநாடுகளைவிட அமெரிக்காவுக்குத் தனிச் சலுகை காட்டப்படுகிறது.

இரண்டாவது உலகப்போர் கனடாவின் தொழில் வளர்ச்சிக்கு அரியதொரு தூண்டுகோலாக அமைந்தது என்னலாம். ஆயுதத் தயாரிப்பையும், அதுபோன்ற வேறு பொருட் தயாரிப்பையும் கண்காணிக்கும் இலாகா, போர்க்காலத்தில் 12,751,000,000 பவுன்களை உலோகத் தொழிற்சாலைகளுக்கும், காண்டிராக்டுகளுக்கு மட்டும் செலவழித்துள்ளது. நியூயார்க் நகரத்தின் மக்கட் தொகைக்கும் குறைவான மக்கள் எண்ணிக்கையை கொண்ட இந்நாடு, சென்ற உலகப்போரின் போது மட்டும் 16200 விமானங்களையும், 8000 கப்பல்களையும் உற்பத்தி செய்தது. இன்று, அகில உலக வியாபாரத் துறையிலும் (International trade) கனடா பெருத்த பங்கு கொண்டுள்ளது. போருக்குமுன், இந்நாட்டுப் பொருளாதாரத்தில், 22 சத விகித வருமானம் ஏற்றுமதி வரிகள்மூலம் கிடைத்தது. இந்நாட்டின் மொத்த வருமானத்தில், 26 சத விகிதம் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் செலவினங்களைச் சரிசெய்ய ஒதுக்கப்பட்டது. கனடாவின் வியாபாரத் துறையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், 40 சத விகிதம், ஏற்றுமதி செய்யப்படுவதற்கு வேண்டிய பொருளையும், 78 சத விகிதம் இறக்குமதி செய்யவேண்டிய பொருளையும் தந்துதவியது. இதனால் கனடா நாட்டுப் பொருளாதாரம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருளாதாரத்தோடு பின்னப்பட்டு மிக நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ளது என்பது நன்கு புலனாகும்.

அரசியலமைப்பு வளர்ச்சி :- 1763 ம் ஆண்டில் பிரான்ஸிடமிருந்து கனடாவைப் பிரிட்டன் கைப்பற்றியது. எனினும், அடுத்த ஒரு நூற்றாண்டுகள் வரை ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் தனித்தனி அரசாங்கத்தின் ஆளுகைக்குட்பட்டே வாழ்ந்து வந்தனர். டர்ஹாம் அறிக்கை காரணமாக, பிரிட்டிஷ்-பிரெஞ்சு மக்களிடை நிலவிய வேற்றுமைகள் குறைந்து, 1867-ம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின்படி, புதிய கனடா உருவாகியது. இந்தச் சட்டம் எழுதப்பட்ட ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தைப்போலவே, கனடா நாடு முழுவதிற்கும் ஒரு கூட்டாட்சி அரசாங்கத்தை நிறுவுவதற்கு உறுதுணையாக நின்றது. சட்டமியற்றல், நிர்வாகம், நீதி-ஆகியஇத் துறைகளைப் பொருத்தவரை, பெடரல் (கூட்டாட்சி). மாநில அரசாங்கங்களின் அதிகாரங்கள் வரையறுக்கப்படுவதாயின. அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தைப்போலல்லாமல், பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம், ஒட்டாவாவில் ஆட்சி செய்யும், கனடா நாட்டுப் பெடரல் அரசாங்கம், மாநில அரசாங்கம் இவைகளின் அதிகாரங்களை அறுதியிட்டுக் கூறுகின்றன.

1867-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மேற்குறித்த சட்டத்திற்கிணங்க, பெடரல், மாநில, அரசாங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறித்து, சென்ற சிலவாண்டுகளாக, நாட்டு மக்களிடை அதிருப்தி வளர்ந்து வருகிறது! சொத்துரிமை, சிவில் உரிமைகள் போன்ற விவகாரங்கள் இன்னும் மாநில அரசாங்கங்களின் கையிலேயே இருந்து வருகின்றன. தேசியப் பொருளாதாரச் செறிவு காரணமாக, சமூக நலன்களைப்பற்றிய பிரச்னைகள், முழு நாட்டின் அடிப்படையிலேயே தீர்க்கப்பட வேண்டிய அவசியத்திற்குள்ளாயிற்று, குறைந்தபட்சக்கூலி, வேலை நீக்கத்தின்போது அளிக்கப்பட வேண்டிய நட்டஈடு, விவசாயக் கடன்கள், தொழில் நேரம், ஏற்றுமதி வியாபாரம்போன்ற விவகாரங்களைப்பற்றிய, பல்வேறு சட்டங்களை ஒட்டாவாவில் இயங்கும் கனடா நாட்டுப் பெடரல் அரசாங்கம், 1934-ம் ஆண்டில் நிறைவேற்றியது. பிரிவி கவுன்சிலின் நீதிக் கமிட்டியின் தீர்ப்புக்கு மேற்குறித்த மசோதாக்கள் சென்றபொழுது, அவை, பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம் மாநில அரசாங்கத்துக்கு வழங்கிய அதிகாரங்களைப் பறிப்பதாகுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. 1940-ம் ஆண்டில் கனடா நாட்டுப் பாராளு மன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க, பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டம் திருத்தப்பட்டது. இதன்படி டொமினியன் அரசாங்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தையொட்டி இன்ஷூரன்ஸ் திட்டமொன்றினை நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. போர்க்காலத்தில், வரிவிதிப்புகள் பற்றிய அவசர அதிகாரங்களையும், அதுபோன்ற வேறுசில அதிகாரங்களையும் மாநிலங்கள் டொமினியன் அரசாங்கத்திற்கு அளித்தன. ஆனால் இந்த அதிகார மாற்றும் தற்காலிகமானதுதான். தற்போது மாநில அரசாங்கங்கள் பெற்றுள்ள அதிகாரங்கள் விரிந்தவைதான். என்றாலும், டொமினியன் அரசாங்க அளவுக்குச் சமூகச் சட்டங்களை ஆக்கும் அதிகாரம் மாநில அரசாங்கங்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி ஒருபுறம் இருந்துவருகிறது. சுருங்கக் கூற வேண்டுமானால், கனடா நாட்டுப் பெட்ரல் அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் வேண்டுமென்ற உடனடித் தேவை இருந்தபோதிலும், அது மிக நுண்ணிய ஒரு அரசியல் பிரச்னையாகவே இருந்து வருகிறது.

கூட்டாட்சி முறை : ஆஸ்திரேலியாவைப் போன்றே கனடாவும் பிரிட்டிஷ் காமன்வெல்த்திற்குட்பட்ட டொமினியன் நாடுகளில் ஒன்றாகும். பிரிட்டிஷ் அரசர் அல்லது அரசியின் பிரதிநிதியாகக் கவர்னர் ஜெனரல் ஒருவர் இருக்கிறார். பெயரளவுக்கே இவர் பிரிட்டிஷ் அரசரின் பிரதிநிதியாக இருக்கிறார். உண்மையில் கனடாவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துபவர் காமன்ஸ் சபை என்றழைக்கப்படும் பாராளுமன்றக் கீழ்ச்சபையில் பெரும்பான்மை இடங்களைக் கொண்ட அரசியல் கட்சியின் தலைவரும், பிரதம மந்திரியுமே ஆவர். காமன்ஸ் சபையில் மொத்தம் 245 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் கியுபெக் மாகாணத்தைத் தவிர வேறு மாகாணங்களில் மக்கள் எண்ணிக்கையின் விகிதாச்சாரப்படி பிரிக்கப்பட்டுள்ள தொகுதிகளில் இருந்து இந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கியுபெக் மாகாணத்திற்கு மட்டும் 65 இடங்கள் பாராளு மன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய மாகாணங்களில் மொத்த மக்கட் தொகை எண்ணிக்கை 65 என்ற அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த வாய்பாட்டின்படி ஒரு தொகுதி ஏறத்தாழ ஐம்பதினாயிரம் மக்களைக் கொண்டுள்ளது.

பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றி, ஐந்தாண்டுகளுக்கோர் முறை கனடாவில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. காமன்ஸ் சபையில் ஆளுங்கட்சி யாதாமொரு முக்கிய பிரச்னையின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அவ்வாக்கெடுப்பில் தோல்வியுற்றால், ஐந்தாண்டுக் காலத்துக்கிடையிலேயே தேர்தல் நிகழும். இந்த நாட்டில் மந்திரி சபையின் பொறுப்பு இங்கிலாந்தைப் போன்றதுதான். சட்டமியற்றலைப் பொருத்தவரையில், கனடா நாட்டுப் பாராளுமன்றம் ஆங்கிலப் பாராளு

— 10ம் பக்கம் —

வெண்பாப் போட்டி-18.

ஈற்றடி :

வீரனையே தேடி விரும்பு.

முடிவு தேதி 31-5-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

> ''போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்.
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!''

எண்ணம்

மலர் 4 ‖ 17—5—58 ‖ இதழ் 44

காங்கிரஸ் கனவான்களே!

காங்கிரஸ் பேரியக்கத்துக்குள் அரும்பு விட்டிருந்த கோளாறுகள், கொள்கைக் குழப்பங்கள் பொதுத் தேர்தலுக்குப் பிறகு வளர்ந்து இயக்கத்தையே அழித்துவிடும் அளவுக்கு உருவம் பெற்றிருக்கிறது என்பதை நடைமுறைச் செய்திகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

காங்கிரஸ், புனிதமான சில கொள்கைகளுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியாவிலே இருக்கிற கட்சிகளில் புதுமையும் அனுபவமும் பெற்றது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான். அந்நியர் ஆதிக்கத்தை அழிப்பதற்கு எல்லாக் கட்சியின் ஒத்துழைப்பையும் சேகரித்துக்கொண்டு தலைமை ஏற்றுப் போர் புரிந்தது. தீண்டாமையை ஒழிக்க எண்ணி 'ஆலயப் பிரவேசம்' என்னும் போராட்டத்தைத் தொடங்கி ஓரளவு வெற்றி பெற்றது. இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டு மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த பெரிய விடுதலைக் கட்சி 1947வரை காந்தியார் நீட்டிய விரல் பக்கம் பாய்ந்து, அவர் வேண்டிய கோரிக்கைகளை நிறைவேற்றி வைத்தது.

அவருடைய மறைவுக்குப்பின், காங்கிரஸ் தனது புனிதத்தைக் கொலை செய்துவிடும் என்று அவர் திடமாக நம்பினார். அதனாலேயே அவர் காங்கிரசைக் கலைத்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடினார். அன்று அந்தப் பெரியவர் சொன்னது உண்மைதான் என்று அவரது சீடரால் கண்டுபிடிப்பதற்கு பதினோரு ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. அவர் சொன்னது 1947-ல்! பண்டிதர் கண்டுபிடித்தது 1958-ல்!

'காங்கிரசில் வகுப்புவாதம் தலைவிரித்தாடுகிறது'

'பதவிப் பித்து தலைக்கேறிவிட்டது'

'ராஜ்ய முதன் மந்திரிகளின் 'ஜபர்தஸ்து' அதிகரித்துவிட்டது.

—இத்தனை குற்றச்சாட்டுகளையும் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களின் பேரில் சுமத்தியிருக்கிறார்.

காங்கிரசைக் கட்டிக் காக்கமுடியும் என்று நம்பியவர், அதற்கான ஆற்றலைப் பெற்றவர். சுமார் நாற்பதாண்டு காலமாக தூய்மையான அரசியல் வாழ்க்கையை நடத்தியவர் கூறுகிறார் காங்கிரசில் . ஜாதிப்பித்தும், பதவிப்பித்தும் தலைக்கேறிவிட்டன என்று. உண்மைதான்.

எல்லா வகையான செல்வாக்குகளையும் பெற்ற ஒரு மிகப் பெரிய தலைவர், உலகமெல்லாம் தெரிந்தவர், தன்னுடைய சொந்தக் கட்சியில் இத்தனை குறைகள் இருக்கின்றன என்று சொன்னால் அந்தக் குறைகள் எளிதிலே அகற்றப்பட்டுவிடக்கூடியவைதானா? என்ன அந்தக் குறைகள்? காங்கிரஸ் எந்தக் கொள்கைகளை நிறைவேற்றி வைக்க உதயமானதோ, அந்தக் கொள்கைகள் அழுகிப் போயிற்று என்கிறார். பட்டம் பதவிகள் வேண்டாமென்றது காந்தியார் காலத்துக் காங்கிரஸ், பதவிப்பித்து தலைக்கேறிவிட்டது என்கிறார் பண்டித ஜவகர்லால் நேரு. காங்கிரஸ்—என்றாலே ஜாதியை ஒழிக்கும் கட்சி என்று காந்தியார் காலத்திலே சொல்லப்பட்டது. இப்போது ஜாதி வெறி தலைக்கேறிவிட்டது என்கிறார் நேருப் பண்டிதர். காங்கிரஸ் கட்சிக்குள்ளிருக்கும் கோஷ்டி மனப்பான்மை அடியோடு ஒழிய வேண்டுமென்றார் காந்தியார். பண்டிதநேரு, ராஜ்ய முதன் மந்திரிகளின் 'ஜபர்தஸ்து' வலுத்துவிட்டது என்கிறார்.

அறுபதாண்டு காலத்திற்குப் பிறகும், காங்கிரஸ் அதனுடைய இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ள வகையில்லை என்று, 'என்னால் முடியாதது ஒன்றுமில்லை' என்று முழங்கும் பண்டிதர் சொல்லுகிறார். இந்தக் குழப்பங்களுக்காகவே தான் ராஜினமா செய்ய முயன்றதாகவும் அவர் குறிப்பிடுகிறார். எல்லா உறுப்பினர்களிடத்தும், கட்சிகளினிடத்தும் அபரிமிதமான அன்பினைப் பெற்றிருக்கும் ஜவகர்லால் நேருவாலேயே காங்கிரசைப் புனிதப்படுத்த முடியவில்லையென்றால், அவருக்குப் பின்னால் யார் இந்தக் காங்கிரசைச் செம்மைபடுத்தப் போகிறார்கள். பண்டித ஜவகர்லால் நேரு, இது மாதிரி எத்தனைமுறை 'விலகிக்கொள்கிறேன், விலகிக்கொள்கிறேன்' என்று மிரட்டிக்கொண்டிருக்க முடியும்?

துணைக்கண்டம் முழுதும் இந்திக்குப் பரவலான எதிர்ப்பு!

தென்னாட்டில் விடுதலை முழக்கம்!

கேரளத்தில் பொதுஉடமைக் கட்சியின் ஆட்சி!

மைசூரில் கட்சிக்குள் குழப்பம்! ஒரிசாவிலும் அதே நிலை!

இந்த நிலையில் காங்கிரஸ் மீண்டும் வலுப்பெறும் என்று யாரும் நம்புவதற்கில்லை. பண்டிதர் மனம் இன்னும் சரி நிலைப்படவில்லையாம்! தேபரோ கட்சியைக் கலைப்போமா என்கிறார். உறுப்பினர்கள் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

யாரும் தலைவர்களுக்குத் திடமான வாக்குறுதி கொடுக்கவில்லை. ஒரு சக்தி வாய்ந்த கட்சி, அதிகாரம் பெற்ற கட்சி, ஜவகரைப் பெற்ற கட்சி இந்த நிலைக்கு வரக் காரணம் என்ன? இங்கே தமிழ் நாட்டுக் கட்சிகள் கவனம் செலுத்தவேண்டும்.

ஒரு கட்சியின் தலைவரும், அதன் தொண்டர்களும் ஒரு பண்பாட்டில், ஒரே கலாச்சாரத்தில் ஒரே மொழியில் தோன்றியவர்களாக இருந்தால்தான் கட்சிக்குள்ளே பந்தபாசத்தைக் காணமுடியும்! இந்த உண்மையை தென்னாட்டு அரசியல் கட்சிகள் புரிந்துகொண்டால்தான் தென்னகம் எழுச்சி பெற மார்க்கம் கிடைக்கும். ★

வடவர்களுக்குத் தொழில்!

குமாவூன் குன்றுவாசியொருவர் ஊசி இலை மரங்களிலிருந்து ரோசனத்தை எடுப்பதைப் படத்தில் காணலாம். குமாவூன் குன்றுகளில் நீண்டோங்கி வளர்ந்துள்ள ஊசி இலை மரங்களிலிருந்து எடுக்கப்படும் அரிய ரோசனம் டர்பண்டைன் தயாரிப்பில் ஒரு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழில், உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த மலைப் பிராந்திய ஜில்லாக்களில் வாழும் கடின உழைப்பாளிகளான ஏழை மக்களுக்கு புதிய சிறந்த வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வழி செய்கிறது.

தாயா, தாதியா?

பெரி. சிவனடியான்

ஏடெழுதக் கோலெடுத்துத் தாள்தி றந்தேன்
    எழுதுபொருள் கிடைக்காமல் திகைப்ப டைந்தேன்
பாடுமிகப் பட்டவனாய்ப் பதைப தைத்தேன்
    பைந்தமிழ்த்தாய் பார்த்தங்கே சிரித்து நின்றாள்.
நீடுபழம் புகழ்பேசும் மைந்தா! எந்தன்
    நிலையின்று கண்டாயா? கண்டு மாநீ
தேடுகின்றாய் பொருள்பலவும், ஒருகால் நானும்
    செத்தபின்னர் புகழ்பாட நினைக்கின் றாயா?

சரிமகனே! அதுசரிதான் தமிழன் பாட்டே
    சாவிற்குப் பின்தானே தாளங் கொட்டும்.
எரிதழலில் எனைவீழ்த்திக் கொளுத்திப் பின்னர்
    ஏடெழுது போதுமது இனிக்கும் கேட்டால்
வருகின்றேன் நானென்றாள், "அம்மா" என்றேன்
    வாய்குழறத் தாய்சொன்னாள் "நானா அம்மா"
"தெருக்கதவைத் தட்டியுனை வளர்க்கத் தெற்குத்
    திசைநோக்கி வந்துவிட்டாள் இந்தித் தாதி

கொழுத்தபணக் காரியடா தாதி, நாட்டில்
    கோலோச்சும் அரசியடா, அவள்தம் மைந்தன்
முழுவுலகும் சுற்றிவரும் மன்னன், நீயோ
    மூச்சுவிடில் பேச்சில்லை, சிறையே ஆட்சி
விழுதுவிட்ட ஆல்என்னை வீழ்த்தத் தாதி
    விரைந்துவிட்டாள் படையுடனே, ஒலித்தாள் இந்தி
அழியத்தான் போகின்றேன், அதனைக் கண்டே
    அழத்தான்நீ போகின்றாய், அறியாய் வேறு."

என்றவுடன் தோள்விம்ம அடியில் வீழ்ந்தேன்
    என்னம்மா சொல்கின்றாய்? தமிழே! தாயே!
கொன்றுவிடக் கொல்லைவழி தாதி வந்தால்
    கூறாக்கி அவள்தசையை உமது காலில்
பொன்மலராய்ச் சூட்டிடுவேன் பொங்கி நிற்பேன்.
    பொருமிமிகப் புலம்பிவிழுந் தழுக மாட்டேன்
அன்றலர்ந்த தாமரையே! அறிவுக் கொத்தே!
    அழிக்கவரும் எருமையினை அடித்தே தீர்ப்பேன்.

சொல்கின்றேன்! கேளம்மா! உன்னைத் தீய்க்கச்
    சூழ்ச்சிவட மொழிக்காரி ஒருத்தி வந்தாள்
நல்லவனாய் அந்நாளில் தமிழன் வாழ்ந்த
    நாகரிக மேம்பாட்டால், அவளை மாய்க்கும்
வல்லவனாய் வாழவழி தவறி விட்டான்.
    வந்தவளோ செருக்கடைந்தாள் மகுடம் பூண்டாள்
முல்லைக்குத் தேரீந்த பெருமை யைப்போல்
    மூதேவி தங்கிடவும் பீடம் தந்தான்.

உண்மையிதே ஒப்புகின்றேன், மானம் விட்டான்,
    உள்ளம்உயிர் விட்டவனாய் உடலாய் நின்றான்,
கண்கெட்டான், கருத்திழந்தான், கால்கை இல்லாக்
    கழிவுடலாய் நடுத்தெருவில் கலங்கி நின்றான்
பண்விட்டான், உன்கூத்துப் பரப்பல் விட்டான்,
    பட்டினியாய் உமைப்பதற அய்யோ! விட்டான்
புண்பட்ட நேரத்தில் செயலி ழந்து
    போக்கிடமும் இல்லாமல் வலிவை விற்றான்.

ஆலயத்தில் நீயில்லை அங்கே தங்கும்
    ஆண்டவனும் அதையறிந்து நாண வில்லை
வேலையிலாத் திண்டாட்டம் கடவு ளர்க்கும்,
    விழியாமல் இருட்டறையில் கிடக்கின் றார்கள்.
மூலையிலே விலகாமல் தூங்கும் தெய்வம்
    முனைந்திடுமா? உனைக்காக்க, முக்கா டிட்டுக்,
காலைமுதல் மாலைவரை, கழுத்த றுந்த
    கனைப்புமொழி கேட்டிடுதே, அந்தோ! வெட்கம்.

நிலவுமுக மங்கைதனை மணையி ருத்தி
    நீள்புருவக் காளையவன் கரம்பி டித்துக்
கலந்துமகிழ் திருமணத்தில் தாய்நீ இல்லை
    கருமாதி வீட்டினிலும் இல்லை, இல்லை
கலம்போன்ற நீமூழ்கக் கடலில் வீழ்ந்து
    கரைசேர முடியாமற் போன துண்மை
நிலவுடைமை இல்லாதார் பட்டா பெற்றார்
    நெல்விளைந்த பூமியிலே நெருஞ்சி சேர்த்தார்.

செத்தமொழி வடமொழியைத் தமிழர் நாட்டில்
    சேரஇடம் தந்ததனால் சிரந்த ணிந்தாய்
இத்தனையும் அறிந்தோம்பின் பாய்ந்தோம், சிங்கம்
    இரைக்காகப் பாய்வதுபோல் தமிழர் கூட்டம்
அத்தனையும் அறிந்துந்தான் முப்பத் தேழில்
    ஆட்குமுறை ஈட்டியுடன் அரக்கி வந்தாள்
முத்திபெற வந்தவளின் மூக்க றுத்து
    மீளாத எல்லைக்குத் துரத்தி விட்டோம்.

படைமறவர் தோள்தட்டி நின்றோம் தாயே!
    பாழுமுயிர் வெல்லமென நினைத்தோ மில்லை
துடைநடுங்கும் இனமில்லை தமிழர், சேரன்
    தோன்றலெனப் போர்க்கோலம் பூண்டோம், இந்தி
இடைமுறித்துக் கூந்தலதை இழுத்துக் காலில்
    இறுக்கியொரு மூட்டையெனக் கட்டி ஏற்றி
விடைகொடுத்தோம் அன்றைக்கே விழித்து விட்டோம்
    விழிநீரைத் துடைத்திடுநீ! வீரர் நாங்கள்.

"மீண்டுமவள் நுழைகின்றாள் மேதை நேரு
    மிகுவலிவைக் கரத்தேந்தி" சுட்டு கின்றாய்
மாண்டாலும் தாயேயுன் மானங் காத்தே
    மாண்டிடுவோம் மயங்காதே வாழ்வே நீதான்
ஆண்டயினம் அழுவதினி அகிலத் தில்லை
    அம்மாநீ கலங்காதே! அறக்க ளத்தில்
பூண்டறுக்கப் புறப்பட்டு விட்டோம் தாயே!
    புலம்பாதே! புன்முறுவல் பூப்பாய் நீயே!

என்குமுறல் செவியேற்றே இதழ்வி ரித்தாள்
    இருளகன்ற மணிக்கண்ணால் எனைய ழைத்தாள்
பொன்வளையற் கரமணைக்க மகனே! உன்னைப்
    பெற்றபயன் பெற்றுவிட்டேன் பிதற்றும் வீணர்
உன்கரத்தால் பொடியாவார் உறுதி! உண்மை!
    ஒன்றுக்கும் அஞ்சாதே! உயர்த்துன் கையை!
என்றவுடன் எழுதிடுகோல் நுனியைப் பார்த்தேன்
    இத்தனையும் என்தாளில் இருக்கக் கண்டேன்.

தென்றல்

17-5-58

198383



லவங்கி

அக்பர் பாதுஷா சிரித்துக்கொண்டே சாய்வு ஆசனத்தில் அமர்ந்தார். ஆந்திர தேசத்துப் பார்ப்பனர் ஜகன்னாதர் மரியாதையுடன் வீற்றிருந்தார்.

ஜகன்னாதர் ஒரு கவிராயர். சமஸ்கிருதத்திலும், பாரசிகத்திலும் நல்ல புலமை இருந்தது. பிழைப்புக்காக பாரசிகம் கற்றார். அதனால் மொகலாய அரசர்களிடம் நிறைய சன்மானம் வாங்கினார்.

கவி, தன்னை ஒருகணம் நினைத்துப் பார்த்தார். அக்பர் மகாராஜாவின் எதிரே சமஆசனத்தில் அமரும் 'பாக்கியம்' கிடைத்ததைப் பற்றி மகிழ்ந்தார். அதோடு தனது பழங்கணக்குகளையும் எண்ணிப் பார்த்தார்...

ஆந்திரப் பிரதேசத்தின் இருளடைந்த குக்கிராமமொன்றில், பாழ்பட்ட மண்டபத்தில், நான்கு பையன்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்த காட்சி அவர்முன் தோன்றியது. அப்போது அவர் உடம்பில் இருந்ததெல்லாம் அழுக்கேறிய வேட்டியும், துண்டு ஒன்றும் தான்! முப்புரி வஞ்சனையின்றி அவரது தேகத்தில் சுழன்றுகொண்டிருந்தது. பின்னர், பக்கத்து நகர மடாலயத்தில் வேதம் ஓதும் பணி அவருக்குக் கிடைத்தது. சாப்பாட்டுக்குக் குறைவில்லை! எனினும் வறுமை அவரது உடலையே வாட்டி எடுத்தது! அப்போது அவர் வாலிபப் பருவத்தின் எல்லையிலே நின்ற காலம்.

ஜகன்னாதன் வறுமையை எதிர்த்துப் போராடத் திட்டமிட்டான். பாதயாத்திரை துவக்கினான். வேத பாடசாலைகள், மடாலயங்கள், கோவில்கள். தம்பிரான், வேத கோஷம், பாராயணம், மதவிவாதம் இத்யாதிகளில் ஈடுபட்டான். அப்போது முகமதியர்களின் ஆதிக்கம் வடஇந்தியாவில் வேரூன்றியிருந்த காலம். ஜகன்னாதனின் மூளை வேலை செய்தது. பாரசிக மொழியை கஷ்டப்பட்டுக் கற்று பாண்டித்யம் பெற்றான். மொகலாய சபாமண்டபங்களில் அவனது கவி ஸ்லோகங்கள் எதிரொலி செய்தன. பிறகு தான் ஜகன்னாதன் 'கவிஜகன்னாதர்' ஆனார்.

பளிங்கு மண்டபத்தின் பஞ்சு மெத்தையில் அமர்ந்திருந்த கவிராயருக்கு, பழைய பாழ்மண்டபத்து நினைப்பு சலிப்பாகத் தோன்றியது. தைரியமாக நிமிர்ந்து உட்கார்ந்தார். 'அக்பர் புவியாளுவோன்; நான் கவியாளுவோன்' என்று முணகிக் கொண்டார். தனது கண்ணோட்டத்தைச் சுழற்றினார். மாடமாளிகையைச் சுற்றிலும்கூட கோபுரங்கள் தென்பட்டன.

மாளிகைச் சுவர்கள் பளிங்குகளால் பதிக்கப்பெற்றிருந்தன. அதற்கு மேலே, இடத்திற்கேற்ப பல்வகை வண்ணங்கள் மிளிர்ந்தன. ஜன்னல்கள் பல! அவற்றில் தொங்கிக்கொண்டிருந்த மஸ்லின் துணிகள், தென்றலில் நடனம் பயிற்றுவித்தன. தவழ்ந்து வந்த ரோஜாமலர்களின் மணமும், ஊதுவர்த்தியின் வாசனையும் மனதிற்கு மகிழ்ச்சியளித்தன. விளாமிச்சவேர் விசிறிகொண்டு இரு காவலர்கள் பாதுஷாவிற்கு வீசிக்கொண்டிருந்தனர்.

முப்பது வயதை எட்டிப்பிடித்த கவிக்கு இவை உள்ளத்தில் மலர்ச்சியைக் கொடுத்தன.

"அப்படியானால் நீர் காவியம் ஏதாவது இயற்றியிருக்கிறீரா?" என்றார் அக்பர்,

"இலக்கண நூல் ஒன்று இயற்றியிருக்கிறேன். அலங்கார சாஸ்திரம், கவித்தன்மை, காவிய நடை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவும் கஜானா அது. நாட்டின் கலைப் பொக்கிஷம் என் நூல்!"

அக்பர் சிரித்துக்கொண்டார். ஆனால் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. தன்னைத்தானே புகழ்ந்துகொள்பவர்களை அக்பருக்கு ரொம்பப் பிடிக்கும். அவர்களை ஒரு விளையாட்டுக் கருவியாகவே மதித்து பேசி மகிழ்வார்.

"பாரசிக மொழியை எதற்காக கற்றீர்?"

கவிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. புன்முறுவல் பூத்தார். அக்பர் விடவில்லை, "முகலாய வேந்தர்களிடம் தஞ்சம் பெறவோ?" என்று கிண்டல் செய்தார். கவியின் நெஞ்சில் முள் தைப்பதைப்போல் இருந்தது. அரசனேயானாலும் தன் அறிவுத் தன்மையை இழுக்காக்கியது, கவியின் இதயத்தைத் தாக்கியது; அவரது குருதி சூடேறியது.

"நான் ஆந்திர தேசத்துப் பிராமணன். என் சனாதன வழக்கத்திற்கு என்றும் மாறுபட்டவனல்ல. ராஜபோகமே கிடைப்பதானாலும், என் மூதாதையரின் குலதர்ம வழக்கத்தை விடவேமாட்டேன்!" கவியின் குரலில் நடுக்கம் தென்பட்டது. அக்பர் அதை உணர்ந்து கொண்டார். பலமாகச் சிரித்தார்.

ஜகன்னாதரின் முகம் சிவந்தது. அஜாக்கிரதையினால் பேசியபேச்சுக்களை நினைந்து பயந்தார். அக்பர் கைகளைத் தட்டினார். இரு சேவகர்கள் வந்து வணங்கி நின்றனர்.

"ராஜ மகாகவிக்கு ஷர்பத் கொண்டு வா" என்றார். இரு விநாடிகள் அமைதி நிலவியது. கவிராயர், எச்சிலை 'கடக்' என்றுவிழுங்கினார்.

"கவி சிரேஷ்டரே, நம் ராஜ்ய பரிபாலனத்தை நீர் அறியீரோ! எம்மதமும் சம்மதமே என்பதே எம் குறிக்கோள். இஸ்லாமுக்கு எவ்வளவு மரியாதை கொடுத்திருக்கிறேனோ— அந்த முழு உரிமையை இந்து மதத்திற்கும் அளித்திருக்கிறேன். என் ராஜகிருஹத்தில் இந்து-முஸ்லீம் ஜீவன்கள் மத வேறுபாடின்றி உலவி வருவதை நீர் அறியீரோ! இந்து யாத்ரீகர்கள் மீது பன்னெடுங் காலமாக விதித்திருந்த ஜஸியா வரியை நீக்கியவன் நானன்றோ! கூர்ஜரம், வங்காளம், பீகார், ஒரிசா, காந்தஹார், காண்டுவானா, தக்ஷிணத்தின் ஆமத் நகர் ஆகியவை எனக்கு அடிமைப் பட்டிருக்கும் நாடுகள். எனது பரந்த தேசம் வடமேற்கில் ஹிந்து குஷ் மலைச் சரிவுகளிலிருந்து, கிழக்கே வங்கம்வரை விரிந்து கிடக்கிறது. இதன் பெருமையில் நான் திளைத்திருக்கவில்லை. இங்குவாழும் என் நாட்டு மக்கள் மத வேறுபாடின்றி மகிழ்வுடன் வாழ்கின்ற சேதி கேட்டு களிப்பில் மூழ்கியிருப்பவன் நான்! எனது மாளிகையை அலங்கரிக்கும் மனைவியாக ராஜபுத்ர ஜோத்பாயும் இருப்பதை நீர் அறியாதவரா? ராஜா பீர்பால் ராஜா தோடர்மால், தளபதி மான்சிங்—இந்த பிரதான அமைச்சர்களெல்லாம் முகமதியர்கள் அல்ல கவிராயரே! என்னுடைய உடம்பில் ஹிந்து மூஸ்லீம் குருதி சம அளவிலேயே ஓடுகிறது என்பதை உணர்வீராக...!" என்று சாந்தமாகப் பேசினார் அக்பர்.

கவியின் கண்கள் கலங்கின. எதிரே ஜன்னல் வழியாக இந்திரப்ரஸ்தத்தின் நீள் சமவெளி தோன்றியது. இடையே சில இந்துக் கோவில்களும், மசூதிகளும் தென்பட்டன. அதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

திடீரென அவரது கண்களிலே ஓர் சூழ்ச்சி ஏற்பட்டது. யௌவனத்தின் விளிம்பிலே நிற்கும் இளம் வாலிபக் கன்னியொருத்தி எதிரில் ஷர்பத் கொண்டு வந்தாள். மின்னிப் பளிச்சிடும் செந்நிறப்பட்டாடையை இந்துக்கள் பாணியிலே உடுத்தியிருந்தாள். அந்தப்புர வழக்கப்படி பின் தலையைமட்டும் முக்காடிட்டிருந்தாள்.

அவளது நீண்ட கருத்த கேசம், பட்டாடையும் மீறி கருப்பாகத் தோன்றியது. கண்களின் ஓரத்திலே தீட்டப்பட்டிருந்த மை, இரு கெண்டை மீன்கள் துள்ளி விழுவதைப்போல தெரித்தன! அவளது இயற்கை மிகுந்த உதட்டுச் சிவப்பும், வெண்ணிற முத்துப்பற்களும், கவியின் உள்ளத்தை ஆகர்ஷித்தது.

அப்பேரெழில் நங்கை காலிலே சலங்கையணிந்து நடந்து வந்தாள். அவள் நடக்கும்போது ஒலிக்கும் ஒவ்வொரு நாதமும், கவி ஜகன்னாதரின் இதய பீடத்தில் பலத்த அடி கொடுத்தன. அருசுவை நீர் அருந்தியவுடன் அவள் பாத்திரத்தைக் கொண்டு சென்ற அருமைமிகு காட்சியோடு, கவியின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு சென்று விட்டாள்.

m211, N54TL
N53·4·44

கவியால் பொறுக்கமுடியவில்லை.

"உலகத்தாரின் உள்ளங்களை ஒரு நொடியில் சிறையிட்டுச் செல்லும் இந்தச் சிங்காரப் பொன் விலங்கு யார்?" என்றார் துடிப்போடு.

"ஏன்? அவள் உமக்கு வேண்டுமோ?" என்றார் பாதுஷா நிதானமாக.

"நிச்சயமாக! அவளை எனக்கே பரிசாக்க வேண்டும். நான் சாகும் வரை அவளை என்னுடனேயே இணைத்திருப்பேன்" என்று கவி அவசரப்படுத்தினார்.

"அவள் என் மகள் லவங்கி!" என்றார் அக்பர்.

கவியின் நெஞ்சத்தில் இடி விழுந்ததுபோன்றிருந்தது. அவரது தலை சுற்றியது. கண்கள் வெளுத்தன! ...ஏதும் பேசமுடியவில்லை. நா தடுமாறிற்று. எழுந்த அக்பரின் கால்களை கட்டிப் பிடித்துக்கொண்டு "என்னை மன்னிக்க வேண்டும்... என்மீது கருணை காட்ட வேண்டும் ...என்னை...எனக்கு தாங்கள் உதவத்தான் வேண்டும்...புவியாளும் மகாராஜா! மத மாறுபாடு இல்லா மகா சிலரே! தங்கள் பெண்ணை எனக்குத் தர வேண்டும்!..." என்று மண்டியிட்டார்.

அக்பர் அவரை நிமிர்த்தி உட்கார வைத்தார். அவரது நெஞ்சில் எத்தகைய துடிப்பும் இல்லை.

— 10-ம் பக்கம் —

குஞ்சரத்தின் கதை

தென்னரசு

இருநூறு ஆண்டுகளுக்கு முன் தென்பாண்டி மண்டலத்தில் நிகழ்ந்த இனிய காதற் கதை இது

தமிழ்நாட்டில் யார் வீட்டுக்கு யார் போனுலும் முதலில் 'வருக' என்று உபசரித்துவிட்டுத்தான் வந்த செய்தியைக் கேட்பார்கள். அதுவும் செட்டிநாடு வரவேற்புக்கலையில், தலைசிறந்தது. தேங்குழலும் அதிரசமும் எப்போதும் தயாராக இருக்கும். தட்டில் அடுக்கி கொண்டுவந்து வைத்துவிடுவார்கள். வீட்டுக்குவீடு கொல்லையில் வாழைத்தோட்டம் போட்டிருப்பதுபோல் குழை குழையாய் வாழைப்பழத்தையும் கொண்டு வந்து வைப்பார்கள். இன்னும் அந்த வளமான வரவேற்பு செட்டிநாட்டில் நின்று நிலவுகிறது.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் நிறைந்த ஊரில், இருந்துகொண்டு அவர்களோடு அடிக்கடி பழகி வந்த அய்யாக்கண்ணுக்கும் அந்தப் பண்பாடு இருந்தது. தேங்காய் பழத்தோடு வீட்டுக்குள் நுழைந்தவர்களை அன்புடன் வரவேற்ருர். பர்மாப்பாயை எடுத்து விரித்தார். வந்தவர்கள் உட்கார்ந்தார்கள். அமிர்தம் காபி கொண்டுவந்து கொடுத்தாள்.

''எல்லாம் முடிந்ததே'' என்ருர் வந்தவர்.

''வந்ததற்கு வெறும் வாயோடு போகலாமா ?''—என்ருர் அய்யாக்கண்ணு.

விருந்தினர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு காபியை அருந்திஞர்கள். அய்யாக்கண்ணு பாயில் அமர்ந்தார் ?

''நாங்கள் உங்களைப் பார்க்கத்தான் வந்தோம். உங்களைப்பத்தி எங்களுக்கு நல்லாத் தெரியும். நிறையக் கேள்விப்பட்டிருக்கோம். இவ எம் மனைவி. உங்க வீட்லே சம்பந்தம் பண்ண எங்களுக்கு ரொம்பநாளா விருப்பம். பிராப்தம் அமையல்லே. நம்ப குடும்பத்துக்கும் உங்க குடும்பத்துக்கும் எல்லா வகையிலும் பொறுத்தம் இருக்கு. பணம் காசைப்பத்திக் கவலையில்லை; கௌரவம் முக்கியம்''—விருந்தாளியின் குரல் கனகனவென்று வெங்கலத் தொனிபோல் இருந்தது.

இடையிலே எதுவுமே பேசாமல் 'உம்' போட்டுக்கொண்[டே] வந்த அய்யாக்கண்ணுக்கு 'கௌரவம்' என்று அவர் சொன்னவுடன் அய்யாக்கண்ணுவின் அடிவயிற்றில் தீப்பற்றியதுபோல் இருந்தது. முகத்தைச் சுளித்தார். அவருடைய வீட்டுக் கௌரவம் கண்ணம்மாளோடு போய்விட்டது என்றல்லவா அவர் எண்ணிக்கொண்டிருக்கிருர். பாவனைக்காக முகத்தைத் துடைத்துக்கொண்டு விருந்தாளியின் பேச்சை விட்ட இடத்திலிருந்து தொடக்கி வைத்தார்.

''எல்லோருமா பணம் காசு என்று அலைகிருர்கள் இல்லையே! தர்மம் தலையைத்தானே காக்கும். மானம் உயிரையே காக்குமே!'' அய்யாக்கண்ணு சொந்த அனுபவத்தை தத்துவ வடிவில் வெளிப்படுத்திஞர். ஏழைகள் அவர்கள் அனுபவங்களை முறைப்படுத்தி வெளியிடும் ஆற்றல் பெற்றிருந்தால், தொழிலுக்குத் தத்துவம் படிப்போரின் கண்டுபிடிப்புகளெல்லாம் அனுபவச் சித்தாந்தங்களுக்கு அருகிலேயே நிற்கமுடியாமற் போய்விடும். உயர்ந்த பதவிகளுக்கும், பட்டங்களுக்கும் அடியிலே இருந்து கிளம்பும் தத்துவ நட்சத்திரங்களைக் காட்டிலும், நரை விழுந்த முடிக்கு அடியிலே இருக்கும் மூளையிலிருந்து கிளம்பும் தத்துவ நட்சத்திரத்திற்கு அதிக ஒளி இருக்கிறது; சக்தியிருக்கிறது.

''உங்க வீட்டுப் பொண்ணை நேரிலே பாத்தவுங்க ரொம்ப நாளைக்கு முன்னமேயே எங்களிடம் சொல்லியிருக்காங்க. நீங்க தட்டாமெ ஒத்துக்கிட்டாப் போதும்!'' என்று விருந்தாளி குழைந்தார்.

அய்யாக்கண்ணுக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியவில்லை. கண் கலங்குவதுபோன்ற உணர்ச்சி அவருக்குத் தட்டுப்பட்டது. மறுபடியும் ஒப்புக்காக, முகத்தைத் துடைப்பதுபோல் கண்களையும் துடைத்துக் கொண்டார்.

''என் மகள் ஓடிப் போய்விட்டாள்!''—என்று சொல்லிவிடமுடியுமா? ஒருவாறு திக்கித் திணறி, ''அதுக்கென்ன சம்மந்தம் செய்துக்கிட்டாப் போகுது!'' என்று பேச்சை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார். மாப்பிள்ளை வீட்டுக்கார அம்மையார் பேச்சோடு பேச்சாக வீட்டுக்குள் நடக்கும் காரியங்களையும் கவனித்துக் கொண்டிருந்தார். ஒரு இளம்பெண் உள் கூடத்தில் போவதும் வருவதுமாக இருந்தது. அந்தக் கிழவியின் கண்களில் பட்டுவிட்டது. அந்தக் குமரிப் பெண்ணின் முன்னழகும் பின்னழகும் கண்டவர் நெஞ்சைக் குடைவதாக இருந்தது. தன்னுடைய மகனுக்குப் பெண் பிடிக்கும் என்று அந்தக் கிழவி மனதுக்குள்ளே எண்ணிக் களித்தாள்.

''அதுதானே பொன்னு?'' என்று துணிந்து கேட்டாள் அந்தக் கிழவி.

''எது?''—ஆவலோடு கேட்டார் அய்யாக்கண்ணு.

''அதோ உள்ளே ஓடி ஆடித் திரிகிறதே, அதைக் கேக்கிறேன்''—கிழவி.

அய்யாக்கண்ணு இருந்த இடத்தில் உட்கார்ந்துகொண்டே கதவிடுக்கு வழியாக உள்ளே பார்த்தார். குஞ்சரம், அமிர்தத்திற்குத் துணையாக வேலை பார்த்துக்கொண்டிருந்தாள். அய்யாக்கண்ணுக்கு துக்கம் தொண்டையைக் கவ்விற்று. 'இல்லை, இல்லை! அது என் மகளல்ல' என்று அவர் சொல்லிவிடவில்லை. ஆமாம். என்பதற் கடையாளமாகத் தலையை அசைத்தார்.

கிழவி விடவில்லை. 'பொன்னுக்குப் பெயர் என்ன வச்சிருக்கீங்க?'

''கண்ணம்மா! குலதெய்வத்தின் பெயர்!''

'ரொம்பச் சந்தோஷம்! எங்க பாட்டி பேருகூட அதுதான்!''

அய்யாக்கண்ணு சிரித்தார். அது வரட்டுச் சிரிப்பு. விழியில் களை இருந்தால்தானே சிரிப்புக்கு உயிர் உண்டு!

விருந்தாளிகள் விடைபெற எழுந்தார்கள்.

''கல்யாணத்தை எப்போ வச்சிக்கிருவோம்?'' — விருந்தாளி கேட்டார்.

''உங்களுக்கு எப்ப இஷ்டமோ அப்ப வச்சுக்கிட்டாப் போகுது!''—அய்யாக்கண்ணு எதிலுமே சிக்கிக் கொள்ளாமல் பேசிஞர்.

விருந்தாளிகள் விடைபெற்றுக் கொண்டு முகப்புக்கு வந்துவிட்டார்கள்.

அப்போது வீட்டுக்குள் இருந்தபடியே அமிர்தம் அய்யாக்கண்ணுவைக் கூப்பிட்டாள்.

''என்னங்க!''

''இம்!''

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை எந்த ஊருன்னு கேட்டீங்களா?''

''எனக்கு புத்தியே கலங்கிப் போச்சு அமிர்தம்'' என்று சொல்லிவிட்டு வீட்டு முகப்புக்கு ஓடிஞர் அய்யாக்கண்ணு.

''இவ்வளவும் சொன்னீங்க. உங்க ஊரைச் சொல்லலேங்களே!''—அய்யாக்கண்ணு சிரிப்பை வலிய முகத்துக்கு வரவழைத்துக்கொண்டு கேட்டார்.

''எங்க ஊரு பிரான்மலை. விறலிமலை சத்தியபாமா, நித்திய கல்யாணி என்கிற ச கோ த ரி களைப்பத்திக் கேள்விப்பட்டிருப்பீங்களே. அவங்களுக்கு நான்தான் சிக்ஷை. அவுங்க சம்பாத்தியத்திலே இன்னிக்கும் எனக்குக் கால் பங்கு உண்டு. எனக்கு ஒரே மகன். அவனும் சங்கீதம் சங்கீதம்னு அலையிருன். அவன் பெயர் பஞ்சவர்ணம்'' என்று அவர் சொல்லிமுடித்தார். அய்யாக்கண்ணு அவர் வாயைப் பாத்துக்கொண்டே நின்ருர். உள் வாசல் நிலைப்படி அருகில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அமிர்தம் நின்ருள்.

★

சுவைமிகுந்த கனியின் சதைக் கீற்றுகளுக்குள் புதையுண்டு கிடக்கும் விதை எப்படியும் வெளிப்பட்டு கதிரவனின் ஒளியால் வெடிக்க வேண்டும் என்று நியதி இருப்பதுபோல், அழகான பெண்கள் துன்பப்பட்டே ஆக வேண்டும் என்கிருர்கள் உலகத்தைக் கரைத்துக் குடித்த அனுபவசாலிகள். துன்பம் சிலரின் எழிலைக் குறைக்கும்; அழிக்கும். வாழ்க்கையில் அதிருப்தியை உண்டு பண்ணும். கோழைத்தனத்திற்கு உரமாக அமையும். ஆனல் சிலருக்குத் துன்பம் வழி காட்டுகிறது. உள்ளுக்குள்ளிருக்கும் மருத்துவனுகவும், ஆசானுகவும் விளங்குகிறது. பெண்களுக்கு வரும் துன்பத்திலும் அத்தகையது உண்டா?

வாழ்க்கையில் பரவி நிற்கும் இன்பதுன்பங்களைப்பற்றி யாரும் இதுவரை சரியான கணக்கைச் சொல்லவில்லை. இன்பமே மிகுதி என்போரும் உண்டு; துன்பமே அதிகம் என்போரும் இருக்கிருர்கள். ஆனல் துன்பத்தைமட்டுமே கண்டு நொடித்துப் போனவர்களோ, இன்பத்தைத்தவிர அணுவளவும் துன்பத்தைக் கண்டிராதவர்களோ உலகில் இல்லை. இன்பம் விருந்துண்ணும்போது துன்பம் படுக்கையறையில் குறட்டை விட்டுக்கொண்டிருக்கிறது. இன்பம் கனவு கண்டுகொண்டிருக்கும்போது துன்பம் பளிங்குக்கூடத்தில் தாளம் தவற, ராகம் குலைய குதித்தாடுகிறது. இது மனித வாழ்க்கையின் இரண்டு அம்சங்கள்.

கண்ணம்மாவின் இருதயத்துப் படுக்கையறையில் துயில்கொண்ட இன்பம் எழவே இல்லை. துன்பத்தின் கூத்து மிகுந்துவிட்டது. இருதயம் அதிர்ந்தது. யாரிடம் கூறி துயரத்தை இறக்கிக்கொள்வது? பருவப்பெண்களுக்கு புத்திக் கூர்மையும் துணிச்சலும் அதிகம் என்பார்கள். உண்மைதான். தோழிப்பெண்கள் இல்லாதபோது தோன்றும் யோசனைகளுக்குப் பலன் கிடைப்பதில்லை. அவளோ விசாரணை இன்றி அடைபட்டுக் கிடக்கும் நிரபராதிபோல் பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் உள்ளம் வெதும்பிக்கிடந்தாள். குறும்புத்தனமான எண்ணங்கள் தோன்றும் பருவத்தில், ஆடிப்பாடிப் பேச முடியாதபோது இளம்பெண்களின் இதயம் அதிகம் உருகி இலகிவிடுகிறது. கண்ணகி புலம்பினுள்; மாதவி பெருமூச்சு விட்டாள். சீதைகூட தன் இன உடலின் வாலிப்பு கண்டு குமுறிஞள். கண்ணம்மா மணமலர்—புது மலர்! செடியின் இலையைத் தொட்டதைப்போல், பஞ்சவர்ணம், அவளது வண்ணப்புடவையை இழுத்தான்; கூந்தலைக் கோதிஞன். ஆம்; கண்ணம்மா புதுமலர்; குன்ருத மணமலர். கரடிக்கும் புலிக்கும் இடையிலே சிக்கிய மானைப்போல், கழுகுக்கும் வல்லூறுக்கும் நடுவிலே சிக்கிக்

— 8-ம் பக்கம் —

அத்திப்பழம்

மா.கி.தசரதன், எம்.ஏ.

- 24 -

'யாராக இருக்கும்' ஏன் அங்கே நிற்கின்றார்கள். என்று ஒரு கணம் நினைத்தான். அதற்குள் அவர்களைத் தெரிந்துகொண்டான். நண்பன் எழிலனும், மணிவண்ணனும் தான் அங்கே நின்றிருந்தார்கள். அவர்கள் வேறுபக்கம் பார்த்திருந்தனர். அவர்களைக் கண்டதும் ஞானசம்பந்தனின் நெஞ்சம் துணுக்கென்றது. இவர்கள் இந்த நேரத்தில் ஏன் வந்தனர் என்று எண்ணினான்; ஒன்றும் விளங்கவில்லை. வேறு நேரமாக இருந்திருந்தால் ஓடிச்சென்று அவர்களை வரவேற்று ஊர் எப்படி இருக்கிறது, நிலம் எப்படி இருக்கிறது, நீர் நிரம்பி இருக்கிறதா என்று எதை எதையோ கேட்டிருப்பான், காப்பி வேண்டுமா, சிற்றுண்டி ஆயிற்று என்று அவர்களை துளைத்திருப்பான்.

ஆனால் அப்போது அவன் இருந்த நிலையில் அவர்களைக் காணவே கூசினான். கலைந்த தலையும் களைத்த உடலும், சோர்ந்த நடையும் அவன் தோற்றத்தையே மாற்றியிருந்தன. 'இரவெல்லாம் எங்கே போயிருந்தாய்' என்று வேறு கேட்பார்கள். 'எதைச் சொல்லி தப்பித்துக் கொள்ளுவது?' என்று பலவாறு அவன் சிந்தை குழம்பியது. அப்படியே திரும்பி வேறு எங்காவது போகலாமா என்றுகூட எண்ணினான். ஆனால் அதற்குள் பார்த்துவிட்டால் என்ன செய்வது என்று அந்த யோசனையைக் கைவிட்டான். ஏதாவது சொல்லியாக வேண்டுமே என்று எண்ணியவனாய்த் தரையையே பார்த்தவாறு மெல்ல அடியிட்டு வந்தான்.

இதற்குள் மணிவண்ணன் அவனைப் பார்த்துவிட்டார்.

"வா அய்யா வா. எவ்வளவு நேரம் இங்கே உனக்காகக் காத்திருப்பது" என்று அவரே இவனுக்கு 'நல்வரவு' கூறினார். அப்போதுதான் அவர்களைப் பார்ப்பவன்போல நடித்து 'எப்போது வந்தீர்கள்?' என்று கேட்டான். அவன் கேட்ட விதமே ஒப்புக்குக் கேட்கிறானே தவிர உள்ளத்திலிருந்து அந்தச் சொற்கள் வரவில்லை என்பது தெரிந்தது.

பேச்சு எதிலோ தொடங்கி எங்கோ சென்று ஞானசம்பந்தனின் திருமணத்திலே வந்து நின்றது.

"உன் தந்தைக்கு இதேதான் கவலை" என்று தொடங்கினார் மணிவண்ணன்.

"ஆமாம்" என்றான் எழிலன் "ம்" என்று முணகினான் ஞானசம்பந்தன்,

"ம்" என்றால் போதுமா. கொஞ்சம் உரக்கச் சொன்னால் தானே நாங்கள் மற்ற வேலைகளைப் பார்க்கலாம்" என்றார் மணிவண்ணன்.

"என்ன வேலைகள்?"

"'என்ன' பா ஒன்றும் தெரியாதது மாதிரி கேட்கிறாயே. திருமணம் என்றால் எவ்வளவுவேலை இருக்கிறது. இன்னும் ஒன்று கூட ஆகவில்லையே."

"ஏன்"

"சரிதான். உன் கதையே அல்லவா பெரிய கதையாக இருக்கிறது!"

"என் கதை என்ன இருக்கிறது."

"நீ என்னமோ புரோகிதர் வேண்டாம் என்று எழுதினாயாம்."

"ஆமாம்."

"என்ன ஆமாம். புரோகிதர் இல்லாவிட்டால் எப்படித் திருமணம் ஆகும்?"

"அதற்குத்தான் அப்படிச் சொன்னேன்."

"எப்படிச் சொன்னாய்?"

"எனக்குத் திருமணம் இப்போது வேண்டாம்."

"இது வேறு புதிய குண்டா" என்று மணிவண்ணன் சலித்துக் கொண்டார்.

அதற்குப் பிறகு மணிவண்ணன் எவ்வளவோ எடுத்துச் சொன்னார். ஒன்றுக்கும் ஞானசம்பந்தன் ஒருப்படவில்லை. "சரி புரோகிதர் இல்லாமல்தான் செய்கிறார்கள். சம்மதமா" என்றார்.

எப்படியாவது திருமணம் முடிந்தால் போதும் என்று அவர்கள் ஆவல்கொண்டிருந்தனர். ஆனால் ஞானசம்பந்தனோ அப்போதுதான் அமுதவல்லியிடமிருந்து வந்திருக்கிறான். அவளிடம் அன்பையும் ஆர்வத்தையும் கண்டு வந்தான். மனதைத் திறந்து பேசிவிட்டு வந்தான். அவள் மணி வயிற்றுத் தன் பெயர் சொல்லிப் பிறந்த பொன்னிடம் மனதைப் பறிகொடுத்து விட்டு வந்திருக்கின்றான். அவன் நெஞ்சத்தில் எவ்வளவோ எண்ணங்கள் வந்து வந்து போயின. ஒன்றாவது தெளிவாகத் தெரியவில்லை.

வேகமாய்ச் செல்லும் இரயில் வண்டியை எட்டி நின்று பார்த்தால் பெட்டிகளில் மனிதர் இருப்பது தெரிகிறது. ஆனால் தெரியும் மனிதரில் இவர் இன்னார் என்று அடையாளம் தெரிவதில்லை. மனத்திலும் எண்ணங்களின் கோவை விரைந்திடும் போதுஅப்படித்தான் இருக்கிறது எதுஎதுவோ எண்ணுகின்றோம். ஆனால் என்ன எண்ணினோம் என்ற தெளிவு இருப்பதில்லை. அந்தக் குழப்பத்திலிருந்து மீள இயலாமல் தவித்தான்.

கிளைத்துச் செல்லும் பாதையில் கைகாட்டி மரம் இல்லை எனில் புதியவன் எப்பக்கம் போவது என்று அறியாமல் யாரையாவது கேட்கலாம் எனத் திரும்பிப் பார்த்தால் ஒருவரையும் காணவில்லை எனின் என்ன பாடுபடுகின்றான். அந்தப் பாடு ஞானசம்பந்தனின் மனம் அப்போது பட்டது.

இதுவா அதுவா என்று அவனால் துணிய இயலவில்லை. வெறும் வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திரும்பத் திரும்பக் கேட்டும் ஒன்றும் விடை வரவில்லையே என்ற ஆத்திரத்தில் எழிலன் கொஞ்சம் கோபமாகவே கேட்டான்.

"அப்போது நாங்கள் வந்த வேலை என்னவது?" என்றான்.

இதைக் கேட்டதும் ஞானசம்பந்தனுக்கும் கோபம் வந்தது. அதைக் கோபம் என்றுகூட சொல்லக்கூடாது. ஒன்றும் தோன்றாத வேளையில் வேண்டியவர்கள்மீது எரிந்துவிழுகின்றோம். அவர்கள் அதைத் தாங்கிக்கொள்வார்கள் என்ற துணிவோ என்னவோ மனத்தின் இயல்பு அப்படி இருக்கிறது. அந்த ஆத்திரத்தில் எழிலனை ஒருமுறை முறைத்தான்.

"என்ன ஆவதா - கடற்கரை பார்ப்பது—கலங்கரை விளக்கம் பார்ப்பது-செத்த காலேஜ் பார்ப்பது - உயிர்காலேஜ் பார்ப்பது- ஊருக்குப் போய்ச் சேருவது" என்று பொரிந்தான்.

யாரும் ஒன்றும் சொல்லவில்லை. கொஞ்சநேரம் அமைதி நிலவியது.

இனி திருமணப் பேச்சு எடுக்கக்கூடாது என்று மணிவண்ணன் முடிவு செய்துகொண்டார். அன்று பகல் முழுவதும் மூவரும் அந்த அறையில் அடைபட்டுக்கிடந்தனர். ஆனால் ஒருவருக்கொருவர் எங்கோ நெடுந் தொலைவில் எட்டி இருப்பவர்களைப்போல எண்ணிக்கிடந்தனர். மாறுநாள் காலை மணிவண்ணனும் எழிலனும் ஊருக்குப் பயணமாயினர். அவர்களை பஸ் ஏற்றிவிட்டு விடுதியின் மாடிப்படி ஏறும்போதே எதிரில் அருணாசலம் நிற்பதைக் கண்டான் ஞானசம்பந்தன்.

"என்ன?" என்றான். அவன் குரலில் கடுகடுப்பு இருந்தது.

"சும்மாதான்" - அருணாசலம் அழுத்தத்தோடு சொன்னான். அவனுக்குத் தெரியும் ஞானசம்பந்தனைப்பற்றி குழைந்தால், இறுகிவிடுவான், இறுகினால் குழைவான் என்பதை இத்தனை நாள் பழக்கத்திலே தெரிந்து வைத்திருந்தான். அதனால்தான் கடுகடுப்பாகக் கேட்டதற்கு அவன் அழுத்தலோடு பதில் சொன்னான்.

"சும்மாதான் என்றால்" ஞானசம்பந்தன்.

"அதான் நேற்று கேட்டேனே"

"என்ன கேட்டாய்?"

"ரூபாய்"

"ம்"

"அதுதான்"

"தருகின்றேன் என்றேனே"

"எப்போ"

"எப்போ என்றால். இங்கே என்ன கொட்டியா கிடக்கிறது"

"கொட்டி கிடந்தா அள்ளிக் கொண்டு போகமாட்டேனா! இல்லாததினால்தான் கேட்டு வாங்குவது."

"சரி சரி அதுதான் இரண்டு நாள் கழித்துத் தருகின்றேன் என்றேனே."

"தருவீர்கள். தராமலா போவீர்கள். இல்லை நான் வாங்காமலா விடப்போகிறேன். சும்மா நினைவு படுத்திப் போகலாம். என வந்தேன். அவ்வளவுதான்"

"சரி. போய் வா"

"நாளைக்கு வரட்டுமா"

"நானே வருகிறேன்"

"ரூபாயோடு" என்று நினைவு படுத்திவிட்டுப் போனான் அவன்.

அன்று பகலும் இரவும் குழப்பத்திலும் திகைப்பிலுமே கழிந்தது. ஞானசம்பந்தனின் மனம் போர்க்களத்தைப்போல ஆகியிருந்தது. போர்க்களத்தில் வீரர்கள் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக்கொண்டு வெட்டிமடிவதைப் போல அவன் மனத்தில் எண்ணங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டன. போர்க்களத்திலே யாராவது ஒரு வீரன் செத்துப்போவான். அல்லது இரண்டு பேருமே செத்துப் போவார்கள்ஆனால் ஞானசம்பந்தனின் மனக்களத்திலே எழுந்து ஆர்த்த எண்ணங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டபோது மாண்டு மடியவில்லை. புதிது புதிதாகக் கிளைத்து எழுந்தன. ஒன்று பற்றி எண்ணியவன் ஓராயிரம் எண்ணங்களை வளர்த்துக்கொண்டான்.

மறுநாள் அருணாசலத்திற்குச் சொன்ன சொல் நினைவுக்கு வந்தது. ஆனால் அவன் கேட்ட தொகை வரவில்லை. என்ன செய்வது. சொல்வது என்று திகைத்துக் கொண்டிருந்தபோது அருணாசலமே காலதர் வழியாக எட்டிப்பார்த்தான்.

"வந்து விட்டாயா. வா உள்ளே" என்று அவனை வரவேற்றான்.

"வா, அண்ணே" என்று யாரையோ அழைத்தவாறு அருணாசலம் உள்ளே வந்து உட்கார்ந்தான்.

அந்த 'அண்ணே' யார் என்பது ஞானசம்பந்தனுக்குத் தெரியாது. அதனால் அவனை உற்றுப்பார்த்தான். அவனும் இவனை உற்றுப்பார்த்தான்,

கண்கள் இரத்தத்தைத் தடவி வைத்ததுபோல சிவந்திருந்தன அவனுக்கு தலைமயிர் உடலுக்குப் பந்தல் போட்டதுபோல், இருந்தது. கன்னத்தின் இரு மருங்கும் அந்தப் பந்தலின் கால்கள்போல கிருதா 'கருகரு'வென மின்னின. மெல்லிய மல்சட்டை, இதுதான் உடம்பு என்று அறிவித்துக்கொண்டிருந்தது.

"இவர் யார்?" என்று கேட்டான் ஞானசம்பந்தன்.

"நமக்கு வேண்டியவர்தான். வேலு என்று பேர். எல்லா வேலையும் தெரிந்தவர்" என்று அவரைப் பற்றிய விவரங்களைத் தொடங்கினான்.

"சரி. எங்கே வந்தே இப்போ" என்றான் ஞானசம்பந்தன்.

"என்ன அய்யா விளையாடறீங்க" என்றான் அவன்.

"தம்பி உனக்கு மச்சான் முறையோ என்னமோ விளையாடுது" என்றான் வேலு. அவன் பேசிய பேச்சு தனி சொல்லழகு பெற்றிருந்தது.

ஞானசம்பந்தனுக்கு ஒருகணத்தில் நிலைமை விளங்கிவிட்டது. அருணாசலம் விளையாடவில்லை. வினையாகிவிட்டது அவன் அமுதவல்லியுடன் ஆடிய ஆட்டம் என்பதை உணர்ந்துகொண்டான். ஒய்யார விலாஸ் மாடியில் 'மேட்டூர் அருணாசலம் நான்தான்' என்று சொன்னது இன்று எங்கு கொண்டுவந்துவிட்டிருக்கிறது என்பதை எண்ணியபோது அவன் உடம்பு நடுங்கியது வியர்வை ஆறாகப் பெருகியது.

அங்கே பேரும் புகழுமாக பிறந்து வாழ்ந்த மண்ணில் திருமணத்திற்குப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

இங்கு மணமகன் பேரும் ஊரும் தெரியாதவனிடம் சிக்கித் திண்டாடிக்கொண்டிருந்தான்.

அங்கே அன்னையும் தந்தையும் ஆடி ஓடி ஒவ்வொரு வேலையாகச் செய்துவந்தனர்.

இங்கே அருமை மகன் செய்த ஒருவேலை அல்லாட்டம் தந்தது.

அங்கே இவன் வரவு நோக்கிக் காத்திருந்தனர்.

இங்கே இவன் அருணாசலத்தின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். மனம் முன்னே சென்று ஐந்நூறு தரா விட்டால் என்னென்ன நடக்கும் என்பதை கணக்குப் போட்டது.

அருணாசலம் எதையும் செய்வான். இதோ அதற்கு அறிகுறியாக வேலு அண்ணனை அழைத்து வந்திருக்கின்றான். அவர்கள் இரண்டுபேரும் ஞானசம்பந்தனின் அறையில் இருப்பதைப் பார்த்தாலே போதும். மற்ற மாணவர்களுக்கு, கதை மட்டும் சொல்லமாட்டார்கள்; கவிதையும் பாடுவர். அவர்கள் அங்கிருக்கும் ஒவ்வொரு வினாடியும் ஞானசம்பந்தனின் நெஞ்சத்தில் ஊசிகொண்டு குத்துவது போல் இருந்தது. அவர்களை எப்படியாவது அனுப்பினால் போதும் என எண்ணினான். பணம் தருகின்றேன் என்று சொல்லவேண்டும், அப்போதுதான் அவர்கள் போவார்கள் என்பதை அறிந்ததும்;

"சரி, நாளை கொண்டு வருகின்றேன்" என்றான்.

"நம்பலாமா" என்றான் அருணாசலம்.

"நிச்சயம்."

"ஏன். இருந்து வாங்கிக் கொண்டுதான் போகலாமே. அங்கேதான் போய் என்ன செய்யப்போகின்றோம்" என்றான் வேலு.

"இல்லை. அய்யா சொன்னால் தவறமாட்டார்" என்று அருணாசலமே அவனை அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

அவர்கள் போனார்கள். ஆனால் ஞானசம்பந்தனின் மனத்திலிருந்து கவலைகள் போகவில்லை. அவை பெருகின.

அவன் மனத்தில் அப்போது ஐந்நூறு ரூபாய்தான் திரும்பத் திரும்ப இடம் பெற்றது. எதுவும் ஐந்நூறு ரூபாயைத்தான் நினைவுபடுத்தின. அருணாசலத்தின் பிடிவாதமும் வேலுவின் சிவந்த கண்களும் அவன் முன் வந்து நின்று 'எங்கே ஐந்நூறு' என்று நொடிக்கொரு முறை கேட்டன.

அன்று இரவு அயர்ந்து அலுத்துப் போனவன் வெறுந்தரையிலேயே தூங்கிவிட்டான். காலை பெரியசாமியின் குரல் கேட்டுத்தான் விழித்து எழுந்தான். தன்னால் எத்தனைபேர் தொல்லைப் படுகின்றார்கள் என்று எண்ணிய போது அவனுக்குக் கொஞ்சம் வருத்தமாகக்கூட இருந்தது. பெரியசாமியின் முகத்தில் சோர்வும் களைப்புமே மிகுதியாக இருந்தது. கவலைக் கடலில் மூழ்கி எழுந்தவர்போல அவர் காணப்பட்டார். "வாருங்கள் அப்பா" என்று சுருக்கமாக அவரை வரவேற்று உட்கார வைத்து விட்டு காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்தான். வந்த பின்னரும், தந்தையும் மகனும் நெடுநேரம் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தனர். ஞானசம்பந்தன் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு அதில் ஒவ்வொரு தாளாகப் புரட்டிக் கொண்டிருந்தான்.

பெரியசாமியே பேச்சைத் தொடங்கினார்:

"மணிவண்ணன் வந்திருந்தாரா?" என்று கேட்டார்.

"ம்" என்றான்.

"என்ன கேட்டார்"

"......"

"என்ன சொன்னாய்?"

"........"

"எனக்கும் அதே பதில்தானா?"

" ...."

"சும்மா இருந்தால் எப்படி? நான் அவர்களுக்கு என்ன சொல்வது?"

"யாருக்கு"

"பெண் வீட்டாருக்கு"

"இப்போது திருமணம்வேண்டாம் என்று சொல்லிவிடுவது"

"இப்போது வேண்டாம் என்றால் பின் எப்போது வைத்துக்கொள்ளுவது என்றாவது சொல்லவேண்டாமா?"

'அது எப்படி இப்போது சொல்லமுடியும்"

"இல்லாவிடின் அவர்கள் சும்மாயிருப்பார்களா. உறுதிமொழி செய்தாயிற்று. நேற்றுகூட உனக்குத் துணிமணி செலவுக்கு என்று ஐந்நூறு ரூபாய் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனார்கள். நீ இப்படிச் செய்வாய் என்று எனக்கென்ன தெரியும். அதனால் அதை வாங்கிக்கொண்டு வந்தேன். நீ ஒருப்பட்டால் இப்போதே கொடுத்துவிட்டுப் போகின்றேன். இல்லையானால் அவர்களிடம் போய் அவமானப்படுகின்றேன். உன்னைப் பெற்றதற்கு நான் இதுகூடவா படக்கூடாது" என்று வருத்தமும் கோபமும் கலந்த குரலில் சொன்னார்.

ஐந்நூறு ரூபாய் என்று கேட்டதும் ஞானசம்பந்தனின் மனம் அருணாசலத்தையும் வேலுவையும் எண்ணியது. அவர்களுக்குச் சொன்னபடி பணம் தரவில்லையானால் என்னென்ன செய்வார்களோ என்று அஞ்சினான். இனி அவர்களிடம் இருந்து தப்பிச் செல்வது என்பது இயலாத செயல். அது அப்போதே ஒய்யார விலாஸிலேயே செய்திருக்க வேண்டும். இனி உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அருணாசலம் வலை போட்டுக் கண்டுபிடித்து விடுவான் என்பதை நினைந்தபோது அவன் மனம் நடுங்கியது; உடலும் நடுங்கியது. அவன் கண்முன்னே அப்போது அருணாசலமும் வேலுவும் தான் காட்சியளித்தனர். வேறு எதையும் காணும் ஆற்றலை அவன் அப்போது பெற்றிருக்கவில்லை. ஒரு ஐந்நூறு... ஒரு ஐந்நூறு...எப்படித் தருவது. தராவிடின் விடமாட்டார்களே என்று இந்த எண்ணங்களே மேலோங்கி நின்றன. திருமணத்திற்கு ஒப்புக்கொள்வதானால் உடனே ஐந்நூறு ரூபாய் பெரியசாமி கொடுத்துவிடுவார்.

ஞானசம்பந்தன் ஒரு முடிவுக்கு வந்தான்.

"சரி. உங்கள் விருப்பம்போல் ஆகட்டும்'பா" என்றான்.

பெரியசாமியின் முகத்தில் புதிய பொலிவு தோன்றியது. மகன் என்ன இருந்தாலும் நம் பேச்சைத் தட்டமாட்டான் என்ற உறுதியுடன் மாத்தூருக்குப் பயணமானார்.

★

"பார்த்தியா வேலு அண்ணே என்னமோ சொன்னால் நம்பமாட்டேன் என்றாயே, இதோ பார், அய்யா சொன்னா செய்வார்" என்று சொல்லியவாறு ஞானசம்பந்தன் கொடுத்த நோட்டுகளை ஒவ்வொன்றாக எண்ணினான் அருணாசலம்.

"எதற்கு அவ்வளவு பணம் தேவையாம்" என்று ஞானசம்பந்தன் அமுதவல்லியிடம் கேட்டான்.

"எனக்கென்ன தெரிகின்றது. எல்லாம் அந்த வேலு செய்த வேலையாகத் தான் இருக்கும்" என்றாள் அவள்.

அதற்குப் பிறகு அருணாசலத்தினிடம் பேசி, ஏன் அவ்வளவு பணம் கேட்டான் என்பதைத் தெரிந்துகொண்டான். வேலுவுக்கு யாரோ ஒரு மந்திரக்காரன் தெரியுமாம். அவன் நோட்டுகளை இரட்டித்துத் தருகின்றானாம். ஆனால் புதிதாகக் கிடைக்கும் தொகையில் பாதியை அவனுக்குக் கூலியாகக் கொடுத்துவிட வேண்டுமாம், என்றெல்லாம் தெரிந்துகொண்டான். ஞானசம்பந்தன் இதை நம்பவில்லை என்றாலும் நோட்டுகள் இரட்டிக்கின்றன என்றதும் அவன் மனம் கொஞ்சம் அலைந்தது. 'நாமும் முயன்றால் என்ன?' என்று எண்ணினான். அதற்கு வேண்டிய துணிவும் இல்லாமல் முதலில் கொடுக்கத் தொகையும் இல்லாமல் என்ன செய்வது என்ற ஏக்கத்தோடு அந்த எண்ணத்தைக் கைவிட்டான்.

அடுத்த இரண்டு மூன்று நாட்கள் ஒருவித நிகழ்ச்சிகளும் இன்றிக் கழிந்தன. அமைதியாக இருந்த சூழ்நிலையில் ஆர்ப்பு எழுந்தது. ஞானசம்பந்தனின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை தோன்றியது.

தொடரும்

ராயப்பேட்டையில்
தி. மு. கழகப்
பொதுக்கூட்டம்
காலம் :
18-5-58 ஞாயிறு மாலை
6 மணி.
தலைவர் :
கோ. சு. மணியம்
பேசுவோர் :
சொல்லின் செல்வர்
ஈ. வெ. கி. சம்பத், எம். பி.
ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். எல். ஏ.
பெ. நா. சண்முகம்
மற்றும் பலர்.
★
—37வது வட்ட தி. மு. க.
சென்னை-14.

விரைவில் !
இவர்தான்
எம். ஜி. ஆர்!
ராஜம்-மணாளன்
எழுதுகிறார்.

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

அவர்கள்தான் என்னை நெருங்கியிருக்கும் பக்தர்கள்! பரவசர்கள்! என்னைத் தொழுபவர்கள்! தலைமை நல்குபவர்கள்!

எனக்குக் கோயில்களில் தனியாட்சி கிடையாது! நோயால் வாடும் ஏழைகளிடம்தான் எனக்கு ஆட்சி! என்னை விட்டு அகல வேண்டியவர்கள் கோயிலுக்குச் செல்வர்!

என்னை நெருங்கி வரவேண்டியவர்கள் நோயாளிகளிடம் செல்வர்!

தீர்த்தங்களிலும் மூர்த்தங்களிலும் எனக்குச் சிறப்புக் கிடையாது! ஏழைகளிடமும் எளியவர்களிடமும் அங்கயீனர்களிடமும் எனக்குச் சிறப்பு உண்டு! அங்குதான் நான் இருப்பேன்!

மதங்களிலும் சாத்திரங்களிலும் என் மனம் செல்வதில்லை!

மனிதனை மனிதன் இழிவுபடுத்தாத அந்த நல்ல கொள்கைகளிலே என் மனத்திற்கு ஈடுபாடு உண்டு.

விழாக்களிலும் ஊர்வலங்களிலும் என் உள்ளம் ஊன்றுவதில்லை!

உதவி செய்பவர்களிடமும் தொண்டர்களிடமும் எனக்கு உறுதியுண்டு.

அர்ச்சகர்களுக்கு நான் அருள் காட்டியதே கிடையாது! அவர்களுக்கு நான் காட்டவேண்டிய அருளை என் பெயர் சொல்லி ஏழைகளிடமிருந்தே வஞ்சித்து இவ்வுலகிலேயே அனுபவித்து விடுகின்றனர். எனக்கு அவர்களைப்பற்றிய கவலையே ஒழிந்தது.

தருமகர்த்தாக்களை நான் தலை நிமிர்ந்தும் பாரேன்!

மடாதிபதிகளைக் கண்டால் என் காலையும் முடக்கிக் கொள்கின்றேன்.

அறியாமையில் மூழ்கி அல்லலுறும் மக்களுக்கு அறிவுபுகட்டும் கல்லூரிகளை—கல்வி நிலையங்களை ஏற்படுத்தி கண்காணித்து வருபவர்களைக் கண்டால் என் தலை தாழும்! ஆம்! நான் அவர்களை வணங்குவேன்!

சிவவேடமும் கொட்டையும் கண்டால் எனக்குச் சிறிதும் பிடிக்காது! இவன் எத்தனைபேர் வாயில் மண்ணைத் தூவினனோ என்ற எண்ணம் வந்துவிடும்!

என்னுடைய பக்தர்களுக்கு பஞ்சமும் இன்னலும்தான் நான் கொடுக்கும் மேலான பொருள்!

அவர்கள் எப்பொழுதும் பசித்தே இருப்பர்!

பசியோடு இருப்பவர்களைக் காண அவர்களுக்குப் பிடிக்காது!

அவர்கள் எப்போதும் மோனமாயிருப்பர்!

வீண் வாக்குவாதங்களும் தர்க்கங்களும் செய்பவர்களைக் கண்டால் அவர்கள் விலகிவிடுவர்!

அவர்கள் எப்போதும் அருள் சிந்தனை உடையவர்கள்!

மக்கள் மருளில் வாழ்வதைக் கண்டால் அவர்களுக்குப் பிடிக்காது!

அவர்கள் எப்போதும் துன்பப் படுபவர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள்!

என்னைப் பற்றி வீண் வாதங்களையும் பிடிவாதங்களையும் செய்பவர்களைக் கண்டால் அவர்களுக்குப் பிடிக்காது!

அவர்கள் உழைப்பாளிகள்!

அவர்கள் தொண்டர்கள்!

அவர்கள் உண்மையானவர்கள்!

அவர்களுக்கு நான் கொடுத்துள்ள பரிசு துன்பம்-இடுக்கண்-துயரம்!

அதுமட்டுமல்ல, அவற்றையெல்லாம் தாங்கக்கூடிய வன்மையான மனம்!''

'தேவா!' என்றேன் நான்! அவரது அடிகளை என் கரங்கள் பற்றில்லாமல் பற்றிக் கிடந்தன.

'அதனாலேயே உம்மை நான் தேடிக் கொண்டு வந்தேன்' என்ருர் அவர்!

நிமிர்ந்து பார்த்தேன்.

அவருடைய திரு உரு நான் கண்டிலேன்!

ஆ, இராமலிங்கசுவாமிகள் எவ்வளவு உண்மையானவர். அவர் கூறிய, 'மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே' என்ற அடி எவ்வளவு உண்மையானது! நிரந்தரமானது! அழிவில்லாதது!

என்னுடைய நண்பரும் உலக சகாக்களும் வந்தார்கள்.

'என்ன கடவுளிடம் சென்றிருந்தீரா?' என்ருர்கள்.

'இல்லை!' என்றேன்.

'ஏன்?' என்ருர்கள்.

'அவரே வந்திருந்தார்!' என்றேன்.

'ஆ! அப்படியா? அப்படியானல் அவர் என்ன சொன்னர்?' என்ருர்கள்.

அவர் கூறியதெல்லாம் ஒன்று விடாமல் கூறினேன்.

மக்கள் எல்லோரும் என்னை மருட்சியாகப் பார்த்தார்கள்!

கோபித்தார்கள் சிலர்! பரிதாபப் பட்டார்கள் சிலர். நான் பைத்தியம் என்று!

அசட்டையாகச் சிரித்தார்கள் சிலர். நான் அறிவிலி என்று!

கேலிப் பேச்சு பேசினர்கள் சிலர். நான் போலி என்று!

எல்லோரும் சேர்ந்து உரக்கக் கூவினர்கள். 'நாத்தீகன்' என்று! பிறகு திரும்பிச் சென்ருர்கள்.

அவர்களுக்கு நான் நாத்தீகன்! கடவுளுக்கு நான் சான்ருேன்! ஆத்தீகம் என்ற போர்வையில் நாத்தீகத்தை நடத்திக் காட்டுபவர்களுக்கு நான் நாத்தீகன்!

அப்படியானல் கடவுளுக்கு நான் ஆஸ்தீகன்!

நான் கடவுள் பக்கம் இருக்கவே எண்ணினேன்.

'ஐயா' என்றது ஒரு கூட்டம்.

ஆம், பட்டினி கிடக்கும் அந்தப் பரதேசி கூட்டம்தான் அது!

கடவுளின் கோயில்கள் நம்மை நாடி வந்திருக்கின்றன! அவைகளை தரிசிக்க வேண்டும் என்று எழுந்தேன்.

''எல்லோரும் இன்புற்றிருக்க
வேண்டுவதே யல்லாமல்
வேறென்றும் அறியேன்
பராபரமே.''

—தாயுமானவர்.

—மலர்விழி

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன்காணும்
மாருத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

தென்றல் வெண்பா ஆயிரம்

தொகுத்தவர் : **கண்ணதாசன்**

'தென்றல்' இதழில் 29-1-55ம் தேதியிலிருந்து 6-10-56ம் தேதிவரை பிரசுரமான வெண்பாக்கள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. ஈற்றடிகளும், முன்னிரு வரிகளுமாக 35 கருத்துக்கள் தரப்பட்டு சுமார் ஆயிரம் வெண்பாக்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. வெவ்வேறு கருத்துக்களை-சொன்னயங்களை-பொருள் நயங்களை ஒரே நூலில் படிக்கும்போது. பல கவிஞர்களும் எழுதிய ஒரு பல்சுவைப் பகுதியைப் படிப்பதுபோன்ற உணர்ச்சி தென்படுகிறது.

பூக்காமற் போகுமோ பூ?
கொண்டு வந்து போட்டுக் கொளுத்து!
கார் கூந்தலேறிக் களித்திருந்த மல்லிகையே!
பூவை மேலெத்தனைப் பூ!
வாள் கொண்டு தாக்குவோம் வா!
பொய்யடா பொய்யடா பொய்!
கற்பழித்துப் போன கடவுளெலாம் உங்களிடம்
மெய்சிலிர்க்கச் சேர்ந்து மகிழ்வேன்!

—என்பனபோன்ற ஈற்றடிகளுக்கு இளங் கவிஞர்கள் அமைத்துக் கொடுத்திருக்கும் வெண்பாக்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாதனவாகவும் பொருளுக்குள் பொருள் கொண்டதாகவும் வடிவம் பெற்றிருக்கிறது. **தென்றல் வெண்பா**-என்றும் யாருக்கும் பயன்படக்கூடிய ஒரு அருமையான நூல். கவிதை எழுதிப் பழக விரும்புவோருக்கு இந்த நூல் ஆசானக இருக்கத் தகுதியுடையது.

சென்னை மலர் நிலையத்தார் அழகிய முறையில் உயர்ந்த காகிதத்தில் சுமார் இருநூறு பக்கங்களுடன், அட்டை பைண்டுடன் வெளியிட்டிருக்கிருர்கள். தொகுப்பாசிரியர் கண்ணதாசன் எழுதிய 'இளந் தலைமுறை' என்னும் நீண்ட முன்னுரை நூலில் இடம் பெற்றிருக்கிறது.

நூலின் விலை ருபாய் இரண்டரை.

கிடைக்குமிடம் :

மலர் நிலையம்,

133, பிராட்வே, சென்னை-1.

அரபுக் கதைகள் : சக்தி வெளியீடு.

பொழுது போக்கிற்கும், படித்தின்புறுவதற்கும் சிறந்தது என்று [illegible]பெற்ற அரபுக் கதைகளை, பகுதி பகுதியாகப் பிரித்து தமிழில் மொழிபெயர்த்து குறைந்த விலையில் நிறையப் பக்கங்களோடு தமிழ் மக்களுக்குத் தரும் எண்ணத்தோடு சென்னை சக்தி காரியாலயத்தார் முதல் மூன்று பகுதிகளை நல்ல முறையில் வெளியிட்டிருக்கிருர்கள்.

மொழிபெயர்ப்பதிலும், தழுவி எழுதுவதிலும் தனக்கென ஒரு புது பாணியைக் கையாண்டு வரும் அ. லெ. நடராசன் அவர்கள் அரபுக் கதைகளை எளிய முறையில் இனிமை தரும் வகையில் மொழிபெயர்த்திருக்கிருர். ஒவ்வொரு கதைக்கும் சித்திரங்கள் போட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பகுதியும் வெள்ளைக் காகிதத்தில் சுமார் 400 பக்கங்கள் கொண்டது. பகுதி ஒன்று ரூ 1-50.

'சக்தி' வை. கோவிந்தன் அவர்களின் இந்த முயற்சி எக்கட்சியினரும் பாராட்டும் வகையில் அமைந்திருக்கிறது.

கிடைக்குமிடம் :

சக்தி காரியாலயம்,

ஆயிரம்விளக்கு, சென்னை-6.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

மன்றத்தையே பிரதி பலிக்கிறது. ஆனல் ஒரே ஒரு விவகாரத்தைப் பொறுத்த வரையில் இவ்விரு பாராளுமன்றத்திற்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. அந்த வேறுபாடு என்னவெனின் கனடாவில் உள்நாட்டு விவகாரங்களைச் சார்ந்த அதிகாரங்கள் பெரும்பாலும் மாநில சட்ட சபைகளுக்கே வழங்கப்பட்டுள்ளதுதான்.

பாராளுமன்ற மேல் சபையாகிய செனட் சபை 96 உறுப்பினர்களைக் கொண்டதாகும். இவர்கள் ஆயுள் உறுப்பினர்கள் (Life members) ஒவ்வொரு மாநிலத்திற்கும் தக்க பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் வகையில் இந்த உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிருர்கள். இந்த உறுப்பினர்கள் டொமினியன் அரசாங்கத்தின் சிபார்சின் பேரில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிருர்கள். சாதாரணமாக, மக்களாட்சி இயங்கி வரும் உலக நாடுகள் பலவற்றுள்ளும், மேல் சபை உறுப்பினர்கள் வெறும் நியமன மூலமாக (By nomination) மட்டுமல்லாமல், தேர்தல் மூலமாக ஒரு சிலரும், கலை, விஞ்ஞானம் இன்ன பிற துறைகளின் பிரதிநிதிகளாக ஒரு சிலரும் நியமிக்கப்படுகிருர்கள். அன்றியும், குடியாட்சி மலரும் நாடுகளில் மேல் சபை உறுப்பினர்கள் ஆயுள் உறுப்பினர்களாக இருப்பதில்லை. மேல் சபையில் வெறும் நியமனம் மூலமாக ஆயுள் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டால், அது உண்மைஜனநாயகத்தின்கொள்கை கோட்பாடுகளுக்கு முரண்பட்டது என்பது நன்கு போதரும். இந்த முறையில் சலுகை பெற்ற ஒரு சிலருக்கே அரசாங்கநடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. அஃதன்றி, திறமையும் தகுதியுமுள்ள வருங்காலச் சந்ததியினரின் வாய்ப்பையும் இம்முறை அடியோடு தடை செய்கிறது. இதனுல் மக்களாட்சிக்குள்ளேயே சலுகைப் பெற்ற சிலரின் a small oligarchy) ஆதிக்கம் வளர, இது அடி கோலுகிறது.

செனட் சபைக்குப் பொதுச் செலவினங்களைக் கண்காணிக்கும் பொறுப்போடு, புதிய சட்டங்களை உருவாக்கும் பெரும் பொறுப்பும் உண்டு. சுருங்கக் கூறின் செனட் சபை, ஒரு சட்டத்தைத் தாமதப் படுத்தவோ தோல்வியுறச் செய்யவோமுடியும். ஆனல் இந்த அதிகாரம் இதுவரை தவருகப் பயன் படுத்தப்பட்டதில்லை. செனட் சபை தன் அதிகாரத்தைத் தவருன பாதையில் செலுத்த முனைந்திருப்பின், அச்சபை கனடாவின்பாராளுமன்றத்தில் இருந்து அடியோடு ஒழிக்கப்பட்டிருக்கும். இவ்வாறு செய்வது மிக மிக எளிது. பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்திற்கு ஒரு சிறு திருத்தம் கொண்டு வருவதன் மூலம் இதனை நிறைவேற்றி இருக்கமுடியும்.

அரசியல் கட்சிகள்:— கனடா நெடு நாட்களாகவே இருகட்சி முறையைத்தான் பின்பற்றி வந்தது. ஆனல் முதலாவது உலகப் போருக்குப்பின், எண்ணிறந்த வேறு பல அரசியல் கட்சிகள் தோன்றலாயின. இந்தக் கட்சிகள் மேற்கு மாகாணங்களில் நாளடைவில் நிரந்தரமாகவே இயங்க ஆரம்பித்தன. சின்னுட்களுக்கு முன்புவரை, லிபரல் கட்சியினரும், திவிர கன்சர்வேடிவ் கட்சியினருமே நாட்டில் நடமாடினர். லிபரல் கட்சித் தலைவரான பிரதம மந்திரி மகன் சீ கடந்த 27 ஆண்டுகளில் 21 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இடையில் ஓர் ஐந்தாண்டுக் காலம் கன்சர்வேடிவ் கட்சி ஆட்சி புரிந்தது. மேற்குறித்த இருகட்சிகளும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இன்று நின்று நிலவும் குடியரசு, ஜனநாயகக் கட்சிகளை சில அம்சங்களில் ஒத்துப் பல துறைகளில் வேறுபட்டும் உள்ளன. அரசியல் கட்சிகளின் ஆக்க வேலைகள் மாநிலங்களிலும் தொடர்ந்து மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் ஒரு நாடாகவும், ஐக்கிய நாடுகள் சபையில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றும், கனடா நாடு திகழ்கிறது. உலக அமைதியை நிலைநாட்டுவதற்குக் கனடா செய்துவரும்சேவை மகத்தானது. ஆயுதப் பரிகரிப்பு (Disarmament) விவகாரத்தைப் பற்றிய இலண்டனில் நடந்து வந்த ஐக்கிய நாடுகள் சபையைச் சார்ந்த கமிட்டியிலிருந்து, ருஷ்ய நாடு சின்னுட்களுக்குமுன் வெளியேறியபின் அந்நாட்டின் ஒத்துழைப்பை மீண்டும் பெறுவதற்கு, கனடா பெரு முயற்சி செய்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளைப்போன்றே, கனடாவும் பல துறைகளிலும் முன்னணி நாடாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

—கோ. கோதண்டராமன்

சிறப்புக் கூட்டம்

வள்ளுவர் மன்ற நிதிக்காக

19-5-58 திங்கள் மாலை 6 மணிக்கு

டவுன் ஹாலில்

தலைவர் :
எஸ். கோபால்சாமி

பேச்சாளர்கள் :

கண்ணதாசன்
'இலக்கியத்தில் காதல்'

ஏ. கோவிந்தசாமி M.L.A.
'சட்டமன்றத்தில் நாங்கள்'

இரெ. இளம்வழுதி M.A., B.L.
'அரசியல் சட்டம்'

எஸ். எஸ். தென்னரசு
'ஆசிய ஜோதி'

திரண்டு வாரீர்!

நன்கொடை 1-0-0, 0-8-0.

—வள்ளுவர் மன்றம்,
கடலூர் சந்திப்பு.

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

"லவங்கி உமக்கு அவசியம் வேண்டுமோ?" என்றுர். "அவசியம் வேண்டும் வேந்தே!" என்று காலில் மீண்டும் விழுந்தார்.

அக்பருக்கு ஒரு யோசனை தோன்றியது. சனுதனத்தில் மூழ்கியுள்ள கவியை, அதே காரணங் காட்டி மறக்கச் செய்யலாம் என்று எண்ணினர். "லவங்கிஎன் பெண். அவள் சூத்திரக் கன்னி. நீர் வைதிகப் பார்ப்பனர் உம்முடைய மதம், ஆச்சாரம், அனுஷ்டானம் இவை என்ன ஆவது சுவாமி!"

கவியின் தலையில் பேரிடி விழுந்ததுபோல் இருந்தது. சுற்றிலும் பார்த்தார். பாபரின் படம் பெரிதாகத் தொங்கிக்கொண்டிருந்தது. பக்கத்திலே ஹுமாயூனது முழு உருவப் படம் இருந்தது. அடுத்தாற்போல் போர் உடையுடன் கூடிய பைராம்கானின் தோற்றம், அருகில் வேறு சிலரது வண்ணப்படங்களும் மாடமெங்கும் காணக் கிடந்தது. ஜன்னல்களில் காதலர்கள் கொஞ்சுவதுபோன்ற சிற்ப வேலைப்பாடுகள் தெரிந்தன. அதற்கப்பால் குவாஜா அபதுல்சமாத், மீர் சையத்அலி போன்ற முஸ்லீம் ஓவியர்களும், தசவந்தன், ஜகன், தாரா, மகேஷ், பசவன்போன்ற இந்து கலைஞர்களும் ஒருங்குகூடி கலைக்கூடத்தை நிர்மாணித்துக்கொண்டிருந்தனர். அருகிலிருந்து அத்தரின் மணம் வீசியது. அகிற்கட்டையின் வாசனைப் புகைகள் மெல்ல கூடத்திற்கு தவழ்ந்து வந்தன.

கவியின் தடுமாற்றத்தைக் கண்ட பாதுஷா "என்ன கவி சிரேஷ்டரே! காதலினும் பெரிதல்லவா ஜாதி?" என்றுர். இச்சொல் ஜகன்னுதரின் நெஞ்சில் சவுக்கடிகொடுப்பதுபோல இருந்தது.

"இல்லை, மகாராஜா! ஜாதியும், மதமும் வெறும் பிரமை! சூழ்ச்சிக்காரர்கள் சுயநலத்தால் எழுதி வைத்த கற்பனை எண்ணங்கள்! வேந்தே! எனக்கு அரச போகம் வேண்டாம்; உங்கள் பெண்ணே வேண்டும்...உங்கள் பெண்ணே வேண்டும்!"

இப்போது அக்பருக்கு அடி விழுந்தாற்போலிருந்தது. திகைப்பு அவரைச் சூழ்ந்துகொண்டது. அப்போதுகூட அவருக்கு ஒரு யுக்தி உதயமாயிற்று. "பாண்டித்யரே! நீர் என்னுடன் சமபோஜனம் செய்யத் தயாரானல், லவங்கி உமக்குக் கிடைப்பாள்!" என்றுர் முடிவாக. இந்தத் திட்டத்தில் நிச்சயம் கவி தோல்வியுறுவார் என்பது அவர் நம்பிக்கை.

'சரி' என்று ஒப்புக்கொண்டால் சமபந்தி தயாராகிவிடும். அங்கே மதுவும் இறைச்சியும், மீனும் உணவாக்குவார்களே...என்று யோசித்தார் கவி. இதற்குள் அவர் பேசிய பழைய உரை உள்ளத்திலிருந்து பீரிட்டு வந்தது. "நான் ஆந்திர தேசத்துப் பிராமணன். என் சனுதன வழக்கத்திற்கு என்றும் மாறுபட்டவனல்ல. ராஜபோகமே கிடைப்பதானுலும், என் மூதாதையரின் குலதர்மம் வழக்கத்தை விடவேமாட்டேன்!"

'சீ! கேவலம் காமசுகத்திற்காக சாத்திர வழக்கத்தை மறப்பதா? பரம்பரையாக நிர்மாணித்துவந்த தர்மத்தை, ஒரு பெண்மைக்கு பலியிடுவதா?' என்று மனசாட்சி அலறியது.

கவியின் கண்கள் சாளரத்தை நோக்கின. கருவிழிக் கண்ணுள் திடீரெனத் தோன்றி, கவியின் உள்ளத்தை சிலிர்க்க வைத்துவிட்டு மறைந்தாள். காரணம் தெரியாமல் துள்ளும் மீனை, கன்னியரின் கண்களுக்கு ஒப்பிட்டுத் திரிந்தோமே, இப்போதல்லவா அதன் பூரணப் பொலிவு தெரிகிறது என்று, கவி தனது கவிதாசக்தியை நொந்து கொண்டார்.

இராமன் சீதையைச் சந்தித்த மிதிலைக் காட்சியும்; சகுந்தலையை துஷ்யந்தன் முதலில் கண்டபோது ஏற்பட்ட உணர்ச்சிப் பிரவாகமும் அவர் மனதில் குமுறி எழுந்தன.

சிவப்புநிற ஆடையணிந்து, பின்னழகை முக்காடிட்டு, மைதோய்ந்த விழிகள் சுழல, கொவ்வை அதரங்கள் துடிதுடிக்க, கைகள் நளின அசைவு காட்ட, கால்கள் திருநடனம் பயில...லவங்கி எதிரே வந்த காட்சி, அவர் கண்முன் வரிசையாக ஓடி வந்தன.

கவி ஜகன்னுதர், அக்பர் பாதுஷா பக்கம் திரும்பினர். "மஹராஜ், சமபோஜனம் செய்யத் தயார்!" என்றுர்.

—மு. நடனன்

★ ★ ★

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

கொண்ட புருவைப்போல் அவள் இளையாத்தக்குடியில் ஜமீன்தாரின் மாளிகையில் அடைபட்டுக் கிடந்தாள்.

அல்லிவேலு அவளுக்குப் பொழுது போக்கிற்கு உதவியாக இருந்தான். அவன் வெகுளி. வினயமில்லாதவன் அவனைக் காட்டிலும் ஐந்து வயது குறைந்த கண்ணம்மாவை 'அக்கா' என்று அழைப்பான். அவள் சிரிப்பாள். அந்தச் சிரிப்பில் கேலியும் கிண்டலும் வெடித்துக் கிளம்பும். அல்லிவேலு தன் மனைவியைப்பார்த்து விட்டு வரப்போன பிறகு கண்ணம்மாவைச் சிரிக்கவைக்க ஆளில்லை. ஜமீன்தார் எத்தனையோ முறை பல மாகக்கூடச் சிரித்துப் பார்த்தார். கண்ணம்மா பதிலுக்கு ஏன் சிரிக்கப் போகிருள்! சிரித்தாள்; ஆனல் அது சிரிப்பல்ல! புகையிலையின் விரிப்புக்கு ஈடாகச் சொல்லும் சிரிப்பல்ல அவள் சிரித்தது. குழந்தையின் மழலை கேட்டு குடுகுடு கிழவி சிரிப்பது போல் சிரித்தாள்.

அல்லிவேலு இல்லாத நாட்களில் ஒவ்வொரு நாளும் மான்கொம்பும், ஜமீன்தாரும் கண்ணம் மாளுக்கு, மாற்றி மாற்றி பேட்டி கொடுத்தார்கள். மான்கொம்பின் பேட்டியிலேயே விருந்துண்ட சிங்கத்தின் அமைதியைக் கண்டாள். ஜமீன்தாரின் பேட்டியிலே வேடனின் குறிப்பைக் கண்டாள். வீரமுள்ள இடத்தில்தான் நீதிக்கு ஒதுங்குவதற்கு நிழலுண்டு என்பதை உலகமறியாச் சிறுமியால் அப்போது உணர்ந்துகொள்ள முடியவில்லை.

அன்று வெள்ளிக்கிழமை! கண்ணம்மா குளித்து முழுகி கூந்தலைக் கோதிக்கொண்டிருந்தாள். சாம்பிராணிப் புகை அவள் இருந்த சலவைக் கல் கூடத்தை நறுமணத்தில் அமிழ்த்திக்கொண்டிருந்தது. அப்போது வாசற் கதவு தட்டும் சத்தம் கேட்டது. விடிந்ததும் விடியாததுமாக பாவி வந்துவிட்டானே என்று முணங்கிக்கொண்டே கதவைத் திறந்தாள் கண்ணம்மா!

அல்லிவேலு பிரயாணக் களைப்போடு எதிரே நின்ருன்.

'அல்லி!'

"வந்துவிட்டேன்!"

- தொடரும் -

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

இந்நிலை உலகத்தின் கூருக இருக்கின்ற ஒவ்வொரு நாடும் முதலில், தனி மனிதன் ஒருவனுடைய ஆட்சிக்குட்பட்டே வந்திருக்கின்றது. என்பதை வரலாற்றின் வாயிலருகில் சென்ற அனைவரும் எளிதில் அறிவர்; முதற்கண் முடியாட்சியில் தொடங்கிய ஆட்சி பின்னர் காலப் போக்கில் மக்களின் அறிவு நாளும் வளர வளர அவ்வாட்சி மறைந்து கொண்டே வந்திருக்கின்றது, வருகின்றது என்பதையும் அறிவர். ஆதியில் அறிவியற்கலை குழந்தைப் பருவத்தில். தத்தை நடை பயிலும் பருவத்தில் இருந்ததால் மக்கள் தனிப்பட்ட ஒரு மனிதனின் ஆணைக்கு அடங்கிஒடுங்கி வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவனையே எல்லாம் வல்ல இறைவன் என்றும் போற்றிப் புகழ்ந்தும் வந்திருக்கின்றனர். நெல்லையும், நீரையும் உயிரென மதிக்காது மன்னனது உயிரையே பெரிதென மதித்துப் போற்றியிருச்கின்றனர் என்பதை உலக இலக்கியங்களின் எந்த ஏட்டைப் புரட்டினாலும் நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது.

தமிழகத்திலே பூண்ட நல்லன் போடு ஆண்ட அரசர்களையும், அவர்சட்கு வருமுன் உரைப் போனாக வாழ்ந்த அமைச்சர்களையும், குற்றமில் ஒற்றர்களையும், ஐம்பெருங்குழுவையும், எண்பேராயத்தையும், தன் மாசில் யாழிலிருந்து எழுப்பும் மதுர இசையால் மன்னனை மகிழ்வித்த பாணர்களையும், பாடினிகளையும் இன்று நம்மால் காணமுடியவில்லை. நாம் பாரியைக் கண்டோமில்லை; பறம்பின் வளத்தினைப் பார்த்தோமில்லை ஆனால் கபிலரின் பாக்களைப்படிக்கும்போது மன்னன் பாரியையும், பறம்பு மலையையும் நம்மால் காணமுடிகின்றது, காண்பது போன்ற உணர்வினைப் பெறமுடிகின்றது.

பாரியைப்போல நம் நாட்டை ஆண்ட மன்னர்கள் பலர். அம்மன்னர்களின் வரலாற்றினையெல்லாம் ஆய்ந்து கற்கும்போதுதான் அவர் தம் ஆட்சிச் சிறப்பினை அறியமுடிகின்றது. எப்படித் தங்களின் ஆட்சித்தேரை அழகுற நடாத்திச் சென்றனர் என்பதையும் தெரிந்து கொள்ள முடிகின்றது. 2000, 3000 ஆண்டுகட்கு முன்பே நிலவிய தமிழக அரசியல் முறையினையும், அம்முறைக்கு ஊறு ஏற்படக் கூடாதென்பதற்காக கோலோச்சும் கொற்றவர்களும், அவர்தம் அடியைத் தழுவி நிற்கும் குடிமக்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் அறிந்து அகமகிழ ஏதுவாகின்றது. அன்று நடைபெற்ற ஆட்சி முடியாட்சி, ஆனால் இன்று நடைபெறும் ஆட்சியோ குடியாட்சி குடியாட்சிக்கும் முடியாட்சிக்கும் உள்ள உறவு மலைக்கும் மடுவிற்கும் உள்ள உறவு போன்றதே! சங்க காலத்தில் பெயரளவில் நடைபெற்றது முடியாட்சிதான் ஆனாலும் முழுக்க முழுக்க குடியாட்சி முறையே நடைபெற்று வந்திருக்கின்றது. அதனாலே தான் இலக்கியங்களிலே 'குடவோலை' என்ற சொல்லையும், 'ஐம்பெருங்குழு' என்ற சொல்லையும், 'எண்பேராயம்' என்ற சொல்லையும் காணமுடிகிறது. மன்னன் தன் விருப்பம்போல் நடப்பவனாக இருந்திருப்பானானால் மேலே கூறிய ஐம்பெருங் குழுவிற்கும், எண்பேராயத்திற்கும் தன் ஆட்சியிலே இடமளித்திருப்பானா? முக்காலும் இருந்திருக்கமாட்டான் என்று துணிந்து கூறிவிடலாம். எனவே முடியாட்சியில் குடியாட்சி முறை ஓம்பப்பட்டு வந்திருக்கின்றது என்பதைத் தெள்ளிதின் ஐயமின்றி அறியமுடிகின்றது.

ஆட்சி முடியாட்சியாக இருந்தாலும் குடியாட்சியாக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலை இல்லை. அக்கறை இல்லை. ஆனால் அறத்தின் அடிப்படையில் அவ்வாட்சி நடைபெற வேண்டும் என்பதே பழந்தமிழ்ப் பெருமக்களின் எண்ணமாகும். அக்காரணம்பற்றித்தான் என்னவோ, பொருளதிகாரங் கண்ட அருந்தமிழ்ப் புலவன் திருவள்ளுவன்.

"வேலன்று வென்றி
தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்"

—என்று பறைசாற்றிச் சென்றிருக்கின்றான்.

'வேலை' நம்பி ஆட்சித்தேரை செலுத்தியவர்கள் இவ்வேலி சூழ் உலகில் நெடுநாள் வாழ்ந்ததுமில்லை. புகழைப் பெற்றதுமில்லை. கொடி கட்டி வாழ்ந்த "ஜார்" ஒரு நொடியில் வீழ்ந்து பட்டதற்குக் காரணம் என்ன? 'ஆண்டவன் தூதுவன் நான்' என்று கூறி இறுமாந்து வாழ்ந்த "லூயி" மன்னன் "லாகில்லட்"டினில் பலியானதற்குக் காரணம் என்ன? வி 1, விலை, என்ற புதுப்புது கொலைக் கருவிக் கண்ட 'இட்லர்' இருந்த இடம் தெரியாமற் போனதற்கும் காரணம் என்ன? எண்ணிப்பாருங்கள் 'வேல்' ஒன்றுதான் வெற்றியைத் தரும் என்று எண்ணிய பெரும் பிழையல்லவா! 'கோல்' தான் அதுவும் அறம் பிழையாக்கோல்தான் வெற்றியைத் தரும் என்ற கருத்திற்கு உள்ளத்திலே இடமளிக்காத காரணம் அல்லவா!

நம் சங்கச் சான்றோர்கள் இக்கருத்திற்கு உயர்ந்த இடம் உள்ளத்திலே அளித்து வந்திருக்கின்றனர் என்பதைத்தான் அகமும், புறமும், பத்துப் பாட்டும் படம் பிடித்துக் காட்டுகின்றன.

மொழிமேல் விழி வைத்துக் காத்த பாண்டியர்களின் வழியிலே வந்தவன். "பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்" என்பவன். இலவந்திகை என்னுமிடத்தில் இறந்து பட்ட காரணத்தினாலேயே இப்பெயரைப் பெற்றான் என்பது வரலாற்று வல்லுநர்களின் கருத்தாகும். பெயருக்கேற்பவே அவன் நன்மாறனாகவே வாழ்ந்து வந்தான். ஆனால் அவனது எண்ணம், செயல் யாவும் போர்க்களத்தை நோக்கியே இருந்தன. வில்லொன்றாலேயே இத்தொல்லுலகை ஆளமுடியும் என்று நம்பினான். நான்கு படைகளின் வன்மையினால் இந்நானிலத்தை நமதாக்கி ஆளமுடியும் என்று உறுதியான எண்ணங்கொண்டிருந்தான். அவனியில் மறமே பெரிதென்று நம்பியிருந்தான். இதைக் கண்டார் மருதனிளநாகனார் என்ற புலவர் பெருமகன். மறத்தையே நோக்கியிருக்கும் மன்னவன் எண்ணத்தை அறத்தை நோக்கித் திருப்ப எண்ணிய புலவர் அவனது அவைக்களம் சென்றார். அப்பெருமகன் எண்ணியது எண்ணியாங்கு எய்தும் திண்ணிய உள்ளம் படைத்தார். 'அறத்தான் வருவதே இன்பம்'—என்ற கருத்து அவரின் பிடர் பிடித்து உந்தியது. நன்மாறன் நாட்டை ஆளும் மன்னன் என்பதையும் மறந்தார். அவனை வாழ்த்துவதுபோல அவன் வாழ்வதற்கு வேண்டிய வளமான கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறினார். அக்கூற்று அப்படியே அழகு தமிழ்ப் பாட்டாக புறத்திலே இடம் பெற்றிருக்கிறது. அப்பாட்டைப் படியுங்கள்.

"வேந்துமேம் பட்ட
பூந்தார் மாற
கடுஞ்சினத்த கொல்களிறுங்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரு
நெஞ்சுடைய புகன்மறவருமென
நான்குடன் மாண்ட
தாயினு மாண்ட
அறநெறி முதற்றே
அரசின் கொற்றம்
அதனால், நமரெனக்
கோல் கோடாது
பிறரெனக் குணங்
கொல்லாது
ஞாயிற் றன்ன
வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன
தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன
வண்மையு மூன்றும்
உடையை யாகி
யில்லோர் கையற
நீ நீடு வாழிய!..... ..."

நல்லாட்சிக்கு அடிப்படை அறமே என்பதை எவ்வளவு அழகாகவும் சுவையாகவும் ஆணித்தரமாகவும் எடுத்து இயம்பியிருக்கிறார் என்பதை இப்பாடல்மூலம் நாம் காணமுடிகிறது. இப்பாட்டைக் கேட்ட பின்பு அந்த நன்மாறன் மறவழியில் சென்றிருக்கமுடியுமா? முடியாது.

மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்களைக் கொண்டு நடாத்தப்படும் ஆட்சி குடியாட்சி. இன்று உலகில் பல நாடுகளில் குடியாட்சியே நடைபெற்று வருகின்றன. நம் இந்தியத் துணைக்கண்டத்திலும் குடியாட்சியே நடைபெற்று வருகிறது. முடியாட்சியில் 'அறம்' எவ்வளவு தூரம் இன்றியமையாததென்பதை மருதனிளநாகனார் மூலம் அறிந்தோம். முடியாட்சி நிலவிய அக்காலத்திலேயே அக்கருத்திற்கு அவ்வளவு மதிப்பிருந்ததென்றால் இன்று குடியாட்சி நிலவும் இக்காலத்தில் எத்துணை அளவு அறப்பண்பு ஓம்பப்பட வேண்டும்? ஆனால் நம் நாட்டில் இப்பண்பு இந்நாள் வரை ஓம்பப்பட்டதாகத் தெரியவில்லை! ஏனெனில் நாளுக்கு நாள் பாதுகாப்புச் சட்டங்களும், அடக்குமுறைகளும் வலுத்து வருவதனால்!

"நமரெனக் கோல் கோடாது
பிறரெனக் குணங் கொல்லாது"

—என்ற அறச்செயலுக்குச் செவிமடுத்ததாக சிறு குறிப்பும் தென்படவில்லை. "நடந்தவை செல்லட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்"—என்பதுபோல இந்நாள்வரை அறப்பண்பு பாதுகாக்காமல் சென்றது தொலையட்டும்; இனியேனும் "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்ற பார்புகழும் பண்பு ஓம்பப்பட வேண்டும் என்பதே நம் விருப்பம்.

—அறவாணன்.

மகிழ்ச்சிக்குரிய செய்தி!

முல்லை
ஆசிரியர் : கண்ணதாசன்

தனி இதழ்
விலை அணா எட்டு

★

தோழர்
டி. கே. சீனிவாசன்
எழுதும்
சிறுகதைகள்
'முல்லை'யில்
தொடர்ந்து வெளிவரும்

முல்லை :: சென்னை-6.

வெண்பாப் போட்டி

17. கலைகடந்து தோன்றுதே கால்.

★ கன்னித் தமிழ்நாட்டில் கைத்தறியில் நெய்திட்ட
வண்ணப் புதுச்சேலை வாங்காமல்—கண்ணே
விலைபோட் டேனிந்த "வாயில்" எடுத்தாய்
கலைகடந்து தோன்றுதே கால்.

—குகன் குருசாமி, கமுதி.

அன்னநடை போட்டே அனிச்சமலர் மேல்நடக்கக்
கன்னிப்போம் கால்களினால் காரிருளில்—அன்பே!
மலைகடந்து காட்டு வழிகடந்து வந்தாய்
கலைகடந்து தோன்றுதே கால்.

—கு. இரமாதேவி, சென்னை-1.

நீலத் திரைமறைவில் நீயேன் ஒளிகின்றாய்?
காலம் வளர்ந்ததோ? கன்னியோநீ?—பால
நிலைமறந்து பாய்ந்தோடி நின்றாலும், உந்தன்
கலைகடந்து தோன்றுதே கால்.

—குமர. நடராசன், குடந்தை.

பொன்முகத்தை மின்னிடையைப் பூங்கரத்தை ஆலிலையைக்
கண்மலரைத் தேனிதழைப் பொற்குன்றை—மின்னும்
வளைத்தோளைப் பல்கலையால் வார்த்தேன்நான் ஆனால்
கலைகடந்து தோன்றுதே கால்.

—அமரன், தேனி.

ஊரினிலே ஓர்கால் உலகினிலே மற்றோர்கால்
நீரினிலே ஓர்கால் நிலத்தோர்கால்—நேரு
விலகுவேன் என்பதெலாம் வீண்வீண்வீண் சூழ்ச்சிக்
கலைகடந்து தோன்றுதே கால்.

—கா. வேழவேந்தன், ஆரணி.

தில்லை நடத்தரசன் இல்லை எனுங்குறையை
வல்லையில் நீக்கிடவே வந்திட்ட—எல்லை
அலைகடல்சூழ் வையத்தே ஆடும் அவர்க்குக்
கலைகடந்து தோன்றுதே கால்.

—பூ. ச. கந்தசாமி, தாம்பரம்.

வாடா மலரன்ன வஞ்சி எனைத்தேடி
கூடவே வந்தாய் குறிப்பறிந்தேன்—ஏடி;
சிலைபோன்று நிற்கின்றாய் சேராமல் உன்றன்
கலைகடந்து தோன்றுதே கால்.

—பா. சு. மணியன், முத்தூர்.

மாலைக் கதிரவனின் மந்த ஒளிவீச
சோலை வனப்பினிலே சொக்கிட்டேன்—வேலைக்
கலைக்கும் விழியுடையாள் கானம் எழுப்பக்
கலைகடந்து தோன்றுதே கால்.

—அன்பின் ஒளி, தஞ்சை.

ஆடும் பிரானென்றே ஆடாத பெம்மானை
ஓடேந்தும் தம்பிரான்கள் ஓதுகிறார்—நாடும்
சிலையில் சிவனாரைச் சீர்தூக்கிப் பார்க்கின்
கலைகடந்து தோன்றுதே கால்.

—சி. சிவராமலிங்கம், [illegible]

அலைந்துமே தேடியுனை அன்னமே நானும்
களைத்திளைத்தேன் காணாமல்; கண்ணே—சிலையாய்
நிலைகுலைந்து அங்கேனோ நிற்கின்றாய்? தூய
கலைகடந்து தோன்றுதே கால்.

—கூத்தரசன், மணக்கரை.

என்நோயைத் தீர்ப்பதற்கு, ஏழிசையே சேற்றினிலே
என்பொடிய நாற்றுதனை ஏற்றினையோ!—மென்மைச்
சிலையழகே சீர்குலைத்தேன்! காண்பதுவோ ஐயோ
கலைகடந்து தோன்றுதே கால்.

—மாண்மகிழன், சென்னை-1.

பின்னல் சடையழகும், பேசுகடைக் கண்ணழகும்,
மின்னல் இடையழகும் மேதினியில்—என்னைக்
கொலைசெய்தல் போதாதோ? கோதையே! உன்றன்
கலைகடந்து தோன்றுதே கால்.

—க. தங்கவேலன், சேர்வைநகர்.

மலையெலாம் தேனருவி வீழ்வதூஉம்! நீண்ட
அலையெலாம் பொன்னிறமாய் மாறுவதூம்!—காலை
மலைக்காடு தோன்றும் பசுங்காட்சி நண்பா
கலைகடந்து தோன்றுதே கால்.

—எஸ். ஆதினமிளகி, பருவக்குடி.

உடுக்கை யிடையெழிலை நான்காண வண்ணம்
தடுக்கின்றாய் பெண்ணே; தரைமேல்-படுத்தே
நிலைமறந்து தூங்குங்கால் நின்னழகைக் காட்டவே
கலைகடந்து தோன்றுதே கால்.

— ஓ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

மலைகடந்து தோன்றுதே மென்மார்பு; கூந்தல்
அலைகடந்து தோன்றுதே ஆசை-சிலையின்
நிலைகடந்து தோன்றுதே நுண்ணிடை; சிற்பக்
கலைகடந்து தோன்றுதே கால்.

—நா. கந்தசாமி, காரைக்கால்.

கொஞ்சும் சலங்கை கொடுக்கின்ற நல்லுணர்வால்
பிஞ்சு விரல்கள்சேர் பேரழகால்-வஞ்சி
குலையாத கட்டழகுக் கோட்டமாம் உன்றன்
கலைகடந்து தோன்றுதே கால்.

—பெரி. சோமசுந்தரம், குளிபிறை.

ஆடினாள் தோகை அழகு மயிலினைப்போல்
நாடும் விழிகள் நகைக்கவே-ஆடற்
கலைதொடர்ந்தே ஆடுங்கால் காற்சிலம்பு பாடக்
கலைகடந்து தோன்றுதே கால்.

—சிற்பி, ஆத்துப்பொள்ளாச்சி.

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு "தென்றல்" சந்தா.

முல்லை
- சிறப்பு மலர் -
எங்கும் விற்பனையாகிறது!

ராஜாபார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு

198383